24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 217 ஆனி 19 ஆம் நாள் வியாழக்கிழமை 04 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

திருமலை மாணவர் ஐவர் படுகொலை; அரச படையினர் 13 பேரும் விடுதலை

நீதியை எதிர்பார்த்த உறவுகள் கவலை

கொழும்பு, ஜூலை 4

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் 5 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பாதுகாப்புத் தரப்பினர் அனைவரும் நிரபராதிகள் என திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வழக்கு விசாரணையை எதிர்கொண்டிருந்த 12 சிறப்பு அதிரடிப் படையினரும், ஒரு பொலிஸ் அதிகாரியும் என அரச படையைச் சேர்ந்த 13 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 19

பலாலியிலிருந்து இந்தியாவுக்கு முதலாவது வானூர்தி ஒகஸ்டில்

அபிவிருத்திப் பணிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு முதலாவது வானூர்தி அடுத்த மாதம் தனது பயணத்தை மேற்கொள்ளும். இதற்குரிய வகையில் முதல்கட்ட அபிவிருத்திப் பணிகள் நாளை வெள்ளிக்கிழமை 19

கோத்தபாயவை குசலம் விசாரிக்க பறந்த எம்.பிக்கள்

கொழும்பு, ஜூலை 4

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று சிங்கப்பூர் சென்று அந்த நாட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் பாது 19

தமிழ்க் கூட்டமைப்புடன் திரும்பவும் இணைய வேண்டும் விக்னேஸ்வரன்

இல்லையேல் தவறை அடுத்த தேர்தலில் அவர் உணர்வார் என்று சிறீதரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 4

முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் தமிழ்க் கூட்டமைப்பை தன்னிடம் வருமாறு கூறுவதை விடுத்து, தனது தவறை உணர்ந்து தமிழ் மக்களுக்குத் துரோகமிழைக்காமல் பணியாற்ற விரும்பினால் அல்லது தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணையவேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். 19

சாவுத் தண்டனை விவகாரம்

மைத்திரியின் முடிவுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 4

தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம், கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்கும் தீர்மானத்தை அரச தலைவர் உடனடியாகக் கைவிட வேண்டும் என வலியுறுத் 19

வடக்குப் பாடசாலைகளின் தடகளம் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடமாகாணப் பாடசாலைகளின் தடகளத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும் இந்தத் தொடர் எதிர்வரும் ஐந்து நாள்களுக்கு நடைபெறவுள்ளது. (ம)

சம்பந்தன் தலைமையின் கீழ் தீர்வு கிடைக்க வாய்ப்பில்லை

விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 4

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் தலைமைத்துவதின் கீழ் அவரது காலத்தில் தீர்வுகள் கிடைக்கும் என்ற சாத்தியங்கள் தென்படவில்லை என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாற்று வலுவுள்ளோர் சங்கத்தில் நோர்வே சன்மோர வாழ் மக்களின் நிதி உதவியுடன் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தீர்வு கிடைக்காதுவிடின் தமிழ் மக் 19

ஸ்கந்தா அரங்குக்கு இன்று சரா எம்.பியால் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அமைக்கத் திட்டமிட்ட திறந்தவெளி அரங்குக்கு இன்று அடிக்கல் நடுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்கந்தவரோதய பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் முயற்சியால் இந்த திறந்தவெளி அரங்கு அமைக்கப்படவுள் 19

வடமாகாண வட்டமேசை கலந்துரையாடல் இன்று

கொழும்பு, ஜூலை 4

வடமாகாணத்தை அபிவிருத்திப் பாதையில் முன்கொண்டு செல்வதற்கு கல்வியலாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் எண்ணக்கருவுக்கமைய உருவான 'வடமாகாண வட்ட மேசை' கலந்துரையாடலின் முதலாவது கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த வட்ட மேசை கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் 'வடமாகாணத்தின் பொருளாதார எதிர்காலம்' தொடர்பில் உரையாற்றவுள்ளார். அதனைத் 19

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் நிகழ்வைக் குலைக்கச் சதி?

பொங்கல் நிகழ்வுக்கு போட்டியாக வந்தது பிரித் ஓதும் நிகழ்வு!

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு - செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை பொங்கல் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அங்கு அத்து மீறி பல்வேறு நிகழ்வுகளை நடத்திவரும் பௌத்த துறவி பிரித் ஓதும் வழிபாட்டை இன்றுமுதல் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். 19

ஜூலை மாத ராசியலன்கள் - 2019



மேஷம்

செவ்வாய் நீசம் பெற்றாலும் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். குருவின் பார்வை செவ்வாய் மீது பதியும் காலம் தொழில் புது முயற்சி ஏற்படும். புதிய கட்டடம் கட்டலாம். செவ்வாய் புதனோடு இருப்பதால் நன்மை அதிகரிக்கும். மூன்றாம் வீட்டில் சுக்கிரன் சூரியன் ராகு ஒரே வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில்கள் நல்ல இலாபத்தைத் தரும்.
17ஆம் திகதிக்கு மேல் நான்காம் வீடான கடகத்தில் சூரியன் செவ்வாய், புதனுடன் இணைகிறார். சுக்கிரனும் 24ஆம் திகதி கடகத்தில் கடகத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் அதி அற்புதமான மாற்றங்கள் ஏற்பட உள்ளது.

சுக்கிரன் ராகு கூட்டணி
திருமண பொருத்தம் பார்க்கலாம் அற்புதமாகப் பொருந்தி வரும். ஏழாம் இடத்து அதிபதியான களத்தரகாரகன் சுக்கிரன் மூன்றாம் இடத்தில் ராகு சூரியனுடன் இணைவது சிறப்பம்சம். காதல் விடயங்களில் கவனம். பக்குவப்பட்ட மனிதராக இருந்து அறிவுப்பூர்வமாக முடிவெடுங்கள்.

தொழில் வியாபாரம்
குரு எட்டாம் வீட்டில் இருப்பதால் பெண்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும் அதிக அளவில் பெரிய முதலீடு எதுவும் செய்ய வேண்டாம். அளவான அளவில் முதலீடு செய்ய வியாபாரம் மிகப்பெரிய வெற்றியைத் தரும். நல்ல வேலை கிடைக்கும்.

மாணவர்களுக்கு வெற்றி
ஜூலை மாதம் சந்தோசமான மாதம். கல்விக்கான வாய்ப்பு அதிகம். மாணவர்களுக்கு இது வெற்றிகரமான மாதம். தேர்வு எழுதி வெற்றி பெறுவீர்கள். அரியர் எழுதி வெற்றி பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் ஏற்றம் கிடைக்கும்.

வெளிநாட்டு யோகம்
ராசி அதிபதி நீசமாக இருந்தாலும் குரு பார்வை இருப்பதால் தன வரவு அதிகரிக்கும். வெளி நாட்டில் வசிப்பவர்கள் தாய் நாட்டில் செட்டில் ஆகலாம். வேலைகள் வாய்ப்பு வசதிகள் அமையும். மேட ராசிக்காரர்களுக்கு பாக்ய ஸ்தானத்தில் சனி கேது இருப்பதால் வெளிநாட்டு யோகமும் அமையும். சனியால் யோகம் அதிகரிப்பதால் புதிய வேலைக்கு முயற்சி செய்யலாம்.

புதிய வீடு வாங்குவீர்கள்
ஜூலை மாதம் பெண்கள் புதிய வீடு வாங்குவீர்கள். வங்கி கடன் மூலம் நன்மைகள் நடைபெறும். அற்புதமான எதிர்காலம் அமையப்போகிறது. மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். சிலருக்கு உடல்வலிகள் போக்கும் வகையில் மருத்துவ உதவி கிடைக்கும். சுக்கிரபகவான் கலை உலக தொடர்புகளை உருவாக்குவார். தைரிய ஸ்தானத்தில் சூரியன், ராகு சுக்கிரன் இணைந்திருப்பது நன்மை. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து போடுவீர்கள்.



கன்னி ராசிக்காரர்களின் குணநலன்கள்

பன்னிரண்டு ராசிக்காரர்களில், ஒவ்வொரு ராசிக்காரருக்கும் வெவ்வேறுவிதமான குணங்கள் இருக்கத் தான் செய்கின்றன.

கன்னி

கன்னி ராசியின் அதிபதி புதன். கன்னி ராசிக்காரர்கள் மிகப் பெரிய அறிவாளிகளாகவும் புதியவற்றைக் கண்டுபிடிப்பதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்களை அத்தனை எளிதாக பேச்சில் வெல்லமுடியாது. ஏனென்றால், இவர்கள் அபார ஞாபக சக்தியுள்ளவர்கள். நீங்கள் பேசியவற்றிலிருந்தே உங்களுக்குப் பதிலடி கொடுத்துவிடுவார்கள். அதனால், 'நாம்தான் பெரியவர்' என்று இவர்களிடம் யாரும் வாதிட முடியாது. இவர்களின் வாக்கு ஸ்தானாதிபதி சுக்கிரன் என்பதால், வாக்கு சாமர்த்தியமுள்ளவர்கள். கனிவான உள்ளம் கொண்டவர்கள். கணக்குப் புலிகள். கணிதம், கணினி, போன்ற துறைகளில் இறங்கி, கலக்கி எடுப்பார்கள். இன்றைக்கு உலகையே ஆட்சிசெய்யும் கணினித் துறையில் புகழ் பெற்று விளங்கு பவர்கள் அனைவரும் புதனின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள்தான். கன்னியில் புதன் அல்லது சந்திரன் இருக்கப் பிறந்தவர்களாகத் தான் இருப்பார்கள். கன்னி ராசிக்காரர்களின் மனம், தெளிந்த நீரோடையைப் போலிக்கும்.

கன்னி ராசிக்காரர்களுக்கு மனோபலம் அதிகமிருக்கும். எந்தச் சூழ்நிலையிலும் நிலை குலைந்து போய்விட மாட்டார்கள். அறிவாயுதம் ஏந்தியே எதிலும் வெற்றிபெறுவார்கள். இன்சொல் மிக்கவர்கள். பெண்களின் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியத்துவம் தருபவர்களாக இருப்பதால், இவர்களிடம் பெண்கள் இயல்பிலேயே நட்பு பாராட்டுவார்கள்.

ரா சிகளும் சிக்கற்களும்

தன்கையே தனக்கு உதவி" என்பது ஆன்றோர் மொழி. எம் கைகள் தான் எம் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றன. மேலும், எம் கைவிரல்களில் அணியும் ராசிக்கல் மோதிரமானது, எமக்குக் கூடுதல் பலம் தந்து எமக்கு சாதகமான சூழல்களை உரு வாக்கி, எம்மை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல் கிறது.
அனைத்துமே ராசிக்கற்கள் தானே என்று எம் இஷ்டப்படி அணியக்கூடாது. ஒவ்வொரு ராசிக்கும் பொருத்தமான ராசிக்கல்லைத் தான் அணிய வேண்டும். அப்போதுதான் நமக்கு நல்ல பலன்கள் கிட்டும். துன்பங்கள் பறந்தோடும். எந்த ராசிக்காரர்கள் எந்த ராசிக்கல் அணியவேண்டும்.

மேடம் :
மேட ராசிக்காரர்கள் அணியவேண்டிய ராசிக்கல் பவளம். மேலும் செவ்வாய் திசை நடப்பவர்களும் பவளம் அணியலாம் . இதை அணிந்தால் தெய்வ அனுகூலம் கிடைக்கும். நம் கோபத்தைக் குறைத்து மனநிம்மதியைத் தரும்.
பல்வேறு அதிர்ஷ்டங்களைத் தரும். நல்லறிவையும், துணிவையும் கொடுக்கும். தீய சிந்தனைகளை நம் மனதுக்குள் அனுமதிக்காது. நமக்கு தைரியத்தை கொடுக்கும். தொழில் செய்யும் வாய்ப்புகளை ஏற்படுத்தும். பதவி உயர்வு கிடைக்கும்.

இடபம்:
இட ராசிக்காரர்கள் அணியவேண்டியது வைரம். மேலும் சுக்கிர திசை நடப்பவர்களும் வைரம் அணியலாம். இதை அணிந்தால் நல்ல மகிழ்ச்சி கிட்டும். வசீகரமான தோற்றத்தைத் தரும்.
அதிர்ஷ்டத்தை உருவாக்கும். உடல் மற்றும் மனதுக்கு நல்ல உரமேற்றக் கூடியது. வெற்றி, செல்வம், அதிர்ஷ்டம் போன்றவற்றை கொடுக்கக் கூடியது . எமக்கு தன்னம்பிக்கையைத் தரக் கூடியது.
ஆண் - பெண் உறவை வலுப்படுத்தும். நல்ல தூக்கத்தைக்கொடுக்கக்கூடியது. வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

மிதுனம்
மிதுன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். மேலும் புதன் திசை நடப்பவர்களும் மரகதம் அணியலாம். இது தொழில் விருத்தியைக் கொடுக்கும். அதிர்ஷ்டம் தரும். நல்ல கற்பனை வளத்தைக் கொடுக்கும். மலட்டுத்தன்மையைப் போக்கும். தீய சக்திகளிடம் இருந்து நம்மைக் காக்கும்.
நல்ல கல்வியைக் கொடுக்கும். பேச்சாற்றல் வளரும். நினைவாற்றலைப் பெருக்கும்.

கடகம்:
கட ராசிக்காரர்கள் அணிய வேண்டியது முத்து. மேலும் சந்திர திசை நடப்பவர்களும் முத்து அணியலாம். இது செல்வ விருத்தியைக் கொடுக்கும். அமைதியையும், மகிழ்ச்சியையும் தரக்கூடியது.
ஆண்களுக்கு தன்னம்பிக்கையையும், பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வையும் தரும். தம்பதிகளுக்கிடையே ஒற்றுமையைத் தரும். நீண்ட ஆயுளைத் தரும். உறவுகளை வலுப்படுத்தும். நட்பைப் பாதுகாக்கும்.

சிம்மம்:
சிம்ம ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கும். மேலும் சூரிய திசை நடப்பவர்களும் மாணிக்கம் அணியலாம். இது மிகுந்த அதிர்ஷ்டத்தைத் தரும். வாழ்வில் உயர்வைத் தரும். புத்திசாதுர்யத்தைத் தரக் கூடியது. நீண்ட ஆயுளைக் கொடுக்கும். மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் தரும்.
கருத்து வேறுபாடுகளை போக்கும். நல்ல தூக்கத்தைத் தரும். உணர்ச்சி வசப்படுதலைக் கட்டுப்படுத்தும்.நினைவாற்றலை அதிகப்படுத்தும். தொழிலில் இலாபம் கிட்டும்.

கண்ணாமூச்சி

கார்த்திக் ராஜு இயக்கிய 'கண்ணாடி' படத் தின் முன்னோட்டக் காணொலியை நேற்று முன்தினம் அமலாபால் வெளியிட்டார்

திருடன் பொலிஸ், உள்குத்து போன்ற படங் களை இயக்கி கவனம் பெற்றவர் கார்த்திக் ராஜு. இவர் அடுத்ததாக 'கண்ணாடி' எனும் திரில்லர் படத்தை இயக்கியுள்ளார். இப்படத் தில் சுதீப் கிஷான் நாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக அன்யா சிங் நடித்துள் ளார்.

கருணாகரன், ஆனந்தராஜ் ஆகியோர் முக் கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு தமன் இசையமைத்துள்ளார். இந்தப் படம் வருகிற ஜூலை 12ஆம் திகதி திரைக்கு வருகிறது. இந்த நிலையில் படத் தின் முன்னோட்டக்காணொலி வெளியிடப் பட்டது. இதனை நடிகை அமலாபால் தனது கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டார். இது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

twitter

சீனிமுகம்மது.k@mseeni33

மின்னுவது எல்லாம் பொன் அல்ல புன்னகையே பெண்ணுக்கு அழகு

பட்டதாரி கதை

"ஏம்பா தம்பி!
படிப்பு முடிஞ்சு ஒரு வருசம் ஆச்சு .
எங்கையாவது வேலைக்கு சேர்ந்துட்டியா?
எப்பவும் போனும் கையுமா இருக்காய்?"
"அதுவா பெரியவரே!
என் போனில் பேஸ்புக் . வாட்ஸப் வசதி எல்லாம் இருக்கு.
அதனால தான் எப்பவுமே அதிலையே இருக்கேன்.
பேஸ்புகில் 3 குரூப் அட்மினா இருக்கேன். எனக்கு கீழ 5 ஆயிரம் பேர் இருக்காங்க. வாட்ஸப்புல 2 குரூப்புக்கு ஓனரா இருக்கேன்"

"அடேங்கப்பா!
எப்படியும் மாசம் ஒரு லட்சம் தேறும் போல இருக்கே...
பரவாயில்லைப்பா! நல்லா இருப்பா.
உங்க அப்பா தான் கூலி வேலை செஞ்சுக்கிட்டு கஷ்டப்பட்டுகிட்டு இருந்தாரு. நீயாவது ஓனர் ஆயிட்டியே! ரொம்ப சந்தோச மப்பா..."
பட்டதாரி!!! ?

எவன்தன்னைத்தானேசெலவழிக்கிறானோ அவன் பணக்காரனாகிவிடுகிறான்.

ஸாரா பெர்ன்ஹர்ட்

நீயே விரும்பினாலும் மனித இனத்திலிருந்து உன்னை உன்னால் பிரித்துக் கொள்ள இய லாது. மனித இனத்துக்காக மனித இனத்து டன் சேர்ந்தே நீ வாழ வேண்டும். நாமெல் லோரும் ஒருவரையொருவர் நேசிக்கவும் ,ஒருவருடன் ஒருவர் கலந்துரையாட வும்,கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவுமே படைக்கப்பட்டு இருக்கிறோம் . தன்னல மறுப்பு இன்றி இது முடியாது.

மார்கஸ் அரிலீயஸ்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
125 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு
பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின்
வேண்டுகோளின் பிரகாரம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
ஈ.சரவணபவன் அவர்களின்
முயற்சியால் அமைக்கப்படும்
திறந்தவெளி அரங்கத்திற்கான
அடிக்கல்நாட்டு விழா–2019

இடம் : ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகம்

காலம் : 04.07.2019 வியாழக்கிழமை
காலை 8.00 மணி

தலைமை : உயர்திரு மு.செல்வஸ்தான்

பிரதம விருந்தினர்
கௌரவ ஈ.சரவணபவன் (பா.உ)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஏற்பாடு:
பழையமாணவர் தாய்ச்சங்கமும்
கல்லூரிச் சமூகமும்

கூடா நட்பு!

அந்தியூர் வயல்காட்டில், இரண்டு கொக்குகள் இனிமையாக வாழ்ந்து வந்தன. அங்கு மேய வரும் பசுவுடன், அவற்றுக்கு நட்பு ஏற்பட்டது. பசுவின் உதவியுடன், எளிதாக வேட்டையாடி அன்றாடம் உண்டன.

அடர்ந்த மரங்களின் இடையே ஒளிந்து திரிந்த ஒரு "நரி, கொக்குகளை கவனித்து வந்தது. அங்கு வந்த ஓநாய், 'என்னப்பா ரொம்ப நேரமா, கொக்குகளை நோட்டமிடுறாய்...' என, கேட்டது.

"எனக்கு நெடுநாளாக ஒரு ஆசை... ஒரு கொக்கை வேட்டையாடி, ஆற அமர ருசித்து சாப்பிடணும். அதுக்கு, பலமுறை முயன்று தோத்துட்டேன்..." என, நாக்கை சப்புக்கொட்டியது.



"நண்பா... இப்பல்லாம், வேட்டையாடி உண்பது முடியாத காரியம்; தந்திரமாக முயற்சித்தால், உன் எண்ணம் ஈடேறும்..." என்று கூறி சென்றது ஓநாய்.

தீவிரமாய் யோசித்த நரி, "பசு இருக்கும் நேரத்தில் கொக்குகளிடம் நெருங்கினால், பாய்ந்து வந்து தாக்கி கொன்றுவிடும். இதை தவிர்க்க முதலில், பசுவுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டால், சமயம் பார்த்து கொக்குகளை இரையாக்கலாம்..." என, முடிவு செய்தது.

அன்று நீண்ட நேரமாகியும், கொக்குகளை காணவில்லை; பசு மட்டும் மேய்ந்துக் கொண்டிருந்தது. அதன் அருகே வந்த நரி, அமைதியாக அமர்ந்தது. பசு, கண்டுகொள்ளவேயில்லை. பொறுமை இழந்த நரி, "என் இனத்தையே வெறுத்து, உன் நட்புக்காக வெகு நேரமாக காத்திருக்கேன்..." என்றது.

உற்று நோக்கிய பசு, மீண்டும் புல் மேய்வதில் கவனம் செலுத்தியது.

சற்றும் சலிப்படையாத நரி, "என் பேச்சில் நம்பிக்கை இல்லையா...? எத்தனைக் காலம் தான், நண்டையும், மீனையும் தின்பது... மண்ணைக் கிளறி, கிழங்குகளைத் தின்றால் என்ன... என்ற கேள்வி எழுந்ததால், ஞானம் பெற்றேன். இனி, உயிர்வதை செய்வதில்லை என, முடிவெடுத்து, என் இனத்தை பிரிந்தேன். உன்னுடன் நட்பு கொள்ள வந்துள்ளேன்; பசியோடு காத்திருக்கிறேன்..." என, மெல்லிய குரலில் கூறியது.

பசுவுக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. ஆனாலும், பணிவுடன் கேட்கும் நரியை, மறுக்க முடியாமல், "சரி... இன்று முதல் நட்பாய் வாழ்வோம்..." என, கூறியது.

மகிழ்ச்சியில் துள்ளிய நரி, "நாளை, உனக்கு ஒரு பசுமை புல் வெளியைக் காட்டுகிறேன்; அங்கு, சுவையான புற்களை வயிறார உண்ணலாம்..." என, கூறி விடைபெற்றது.

அடுத்த நாள்,

அதிகாலையே வயல்வெளிக்கு வந்தது நரி. அதைக் கண்டதும், பயந்து பறந்த கொக்குகள், ஒரு மரத்தில் பாதுகாப்பாக அமர்ந்தன.

தூரத்தில், பசு வருவதை பார்த்த நரி, வேகமாக சென்று வரவேற்றது. வழக்கமாக மேயும் வயலுக்கு வந்த பசு, "இந்த நரி சைவமாக மாறி விட்டது. பயப்படாமல், மரத்தை விட்டு இறங்கி வாருங்கள்; நண்பர்களாக இருப்போம்..." என்று, உரத்த குரலில் கூறியது.

இதை நம்பி வந்த கொக்குகளிடம், "புதிய நண்பன் நரி, வளமிக்க இடத்திற்கு அழைத்து செல்லும்... நரியாரே முன் சென்று வழி காட்டும்..." என, நடக்கத் தொடங்கியது பசு. கொக்குகள், பின்னால் தத்தித்தத்தி நடந்தன.

அருகே கொக்குகளைக் கண்டு நரியின் ஆவல் எல்லை மீறியது. பெண் கொக்கு மீது, விருட்டென பாய்ந்து, கண் இமைக்கும் நேரத்தில், அதன் கழுத்தைகவ்வியது.

அபாய சூழலை உணர்ந்த ஆண் கொக்கு, 'சட்' என, பறந்து நரியின் கண்ணில், 'நச்' என, கொத்தியது. பசுவும் தாமதிக்காமல், நரி மீது பாய்ந்து, கொம்பால் குத்தி வீசியது. புதர் அருகே விழுந்த நரிக்கு, ஒரு கண் பறிபோனது. கதறி துடித்தபடி, புதருக்குள் ஓடி மறைந்தது.

காயமடைந்த கொக்குக்கு, பச்சிலை மருந்து போட்ட பசு, பரிவுடன் நாவால் நக்கி இதப்படுத்தியது. அதிர்ச்சியில் இருந்து மீண்டது பெண் கொக்கு. கொக்குகளை முதுகில் ஏற்றி, வயல்காட்டை நோக்கி கவனமாக நடந்தது பசு.

'கூடா நட்பு கேடாய் முடியும்' என்பது மூத்தோர் அறிவுரை. அதை மனதில் கொண்டு, நண்பர்களை கவனமாக தேர்ந்தெடுக்க பழகுங்கள்!

மடகாஸ்கர்

- உலகின், மூன்றாவது, பெரிய பவளப் பாறைகள் இங்கு உள்ளன.
- உலகில், மிக அதிகமான கிராம்பு மற்றும் நவரத்தினங்கள் கிடைக்கின்றன.
- இங்கு, 14 ஆயிரம், செடி, கொடி, மரங்கள் உள்ளன; இவற்றில், 90 சதவீதம், உலகின், வேறு எந்த நாட்டிலும் கிடையாது.
- மக்கள் தொகை, 25 லட்சம்! ஐந்து பெரிய நகரங்கள் உள்ளன; இவற்றில், பெரிய நகரின் மக்கள் தொகை, மூன்று லட்சம்; சிறிய நகரத்தின் மக்கள் தொகை, இரண்டு லட்சம்".
- இந்த நாட்டின் முக்கிய மொழிகள், மலகாசி மற்றும் பிரெஞ்ச்.
- கடந்த, 1897இல், பிரெஞ்ச் நாட்டின் காலனியானது
- கடந்த, 1960இல், சுதந்தரம் அடைந்தது.
- ஜனநாயக நாடு, பார்லிமென்ட், குடியரசு தலைவர் மற்றும் தலைமை அமைச்சர், அமைச்சர்கள் உண்டு.
- இந்த தீவுக்கு, இந்தியாவிலிருந்து, உடைந்து, நகர்ந்து, ஆப்பிரிக்காவின் அருகில் நிலை கொண்டதாக கூறுகின்றனர்.
- அபூர்வ உலோகங்கள், ஏராளமாய் கிடைக்கின்றன. கிராபைட், மைக்காமிக அதிக அளவில் கிடைக்கிறது.
- ஷெபூ பசுக்கள் மிகவும் பிரபலம்; இவற்றின் எண்ணிக்கை, மனிதர்களை விட அதிகம்; இதன் கொம்பும், முன் கழுத்தில் உள்ள பெரிய வீக்கமும் பிரமாண்ட மானவை ஆனால், பால் தருவதில்லை
- இந்த தீவிற்கு ஒரு மன்னரும், ராணியும் உண்டு; மலை மீது அரண்மனை, கட்டப்பட்டுள்ளது.,
- பறக்க இயலாத, 'எயிபயார்னிஸ்' என்ற, ராட்சஷ பறவை ஒரு காலத்தில் இருந்தது. இதன் முட்டை, கால்பந்து அளவில் இருக்கும் பெரிய இறகுகளுக்காகவும், மாமிசத்துக்காகவும் வேட்டையாடப்பட்டு இன்று அழிந்துவிட்டது.
- ஆப்பிரிக்காவை ஒட்டி இருந்தாலும், விஷமிக்க பாம்புகள், சிங்கம், சிறுத்தை, யானை, மான்கள் கிடையாது.
- ஆண்டிற்கு, 140 அங்குலம் மழை உண்டு; பாலை வனமும் உண்டு.
- கிராமங்களில் கத்தோலிக்க மற்றும் ப்ரொடஸ்டென்ட் பிரிவினருக்கென, தனித்தனி தேவாலயங்கள் உண்டு.
- கருஞ்சிவப்பு நிறமலர்களையும், சிவப்பு வண்ண போகன் வில்லா செடிகளையும், ஏராளமாய் காணலாம்.
- உலகின், 42ஆவது மிகப்பெரிய தீவு.
- 'பாவோபாப்' என்ற பிசாசு மரம், இங்குள்ளது. இதை, இரவில் பார்த்தால், பயமாக இருக்கும்.

வர்ணம் தீட்டுவோம்

மழை

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒருவிழா

இடியிடிக்கும் மேகங்கள்
இறங்கி வரும் தாளங்கள்

மின்னலொரு நாட்டியம்
மேடை வான மண்டபம்

தூறலொரு தோரணம்
தூய மழை காரணம்

எட்டு திக்கும் காற்றிலே
ஏக வெள்ளம் ஆற்றிலே

தெருவெங்கும் வெள்ளமே
தீண்ணையோரம் செல்லுமே

தவளை கூட பாடுமே
தண்ணீரிலே ஆடுமே

அகன்ற வெளி வேடிக்கை
ஆண்டு தோறும் வாடிக்கை



விவேகானந்தரின் பொன்மொழிகள்

- தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.
- உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையான வனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.
- வலிமையின்மையே ஒருவனின் துன்பத்துக்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் எம்மை விட்டு அகலவில்லை.
- வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில்! அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்த குணங்கள் தாம், அவர் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணமாகும்.
- உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்க வேண்டும்
- மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும். எல்லா மிருங்களைக் காட்டிலும் எல்லாக் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும்

Yarl Smart Water Solution (Pvt) Ltd

உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று
நீர் பிரச்சினைகளில் இருந்து
விடுபட வேண்டுமா?

LIFE TIME Service Warranty

30 Liters Per Hour



60 Liters Per Hour



SPECIAL OFFER



250 LPH Water Purification Plant.





யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு

Hotline:-
077 057 3684
077 473 9802
077 112 6410

ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

நீரில் உள்ள பிரச்சினைகளின்
தீர்வாக நாங்கள்....

Head Office:- No.341,K.K.S Road,
Jaffna.
021 430 0044

Branch:-Karadippokku Junction,
Kilinochchi.
021 430 0045

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி நல்லம்மா பொன்னம்பலம்

தோற்றம்	மறைவு
02.01.1937	09.07.2013

திதி: ஆனிபூர்வபக்க துதியை

ஊருக்கும் உலகுக்கும் உளம் நிறைய மாணவர்க்கும்
ஒளிதந்து மெழுகு திரிபோல் வாழ்ந்து மறைந்த
– நல்ல அம்மா

டச்சுவீதி, மீசாலை. (CS 21313) (13,17) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

பிறப்பு	இறப்பு
15 . 02 . 1939	03 . 07 . 2019

வேலுப்பிள்ளை மகேஸ்வரி

நவற்கிரி புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேஸ்வரி நேற்று (03.07.2019) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சௌந்தேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் தர்மசிறி, மகாலட்சுமி, விஜயலட்சுமி(கனடா), வரதராசன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2019 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வே.தர்மசிறி
(மகன் - ஆட்டுக்குட்டி)
துர்க்காராண்ஸ்போட்

(CS 24877)
(14,17)

077 799 0009

வாடகைக்கு

இல. 581, K.K.S வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா சந்திக்கு அருகில்) 1700 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட அரச, தனியார் காரியாலயம், தனியார் கல்விநிறுவனம், பயிற்சி நிலையங்களுக்கு உகந்த சகல வசதிகளுடனான மேல்தளம் வாடகைக்கு விடப்படும்.

(Cs/cs 15043/(13))

021 222 6888, 077 362 6230

பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாள்கள் தேவை

1. கணிய அளவையியலாளர் - QS (Minimum 3 year experience)
2. தொழில்நுட்ப அலுவலர் - TO
   - NVQ Level 4 or Equivalent with minimum 2 year experience

Contact No: 075 918 3940
E-mail : starcontractors12@hotmail.com

விற்பனைக்கு

50 அடி தகரக் கொட்டகை, 30 அடி வளைவு கொட்டகை, கண்ணாடி Showcase 02, இறாக்கித் தட்டு 02 விற்பனைக்கு

தொடர்பு: **077 475 8690, 075 567 8225**

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், சட்டறிங் வேலை செய்பவர் உடன் தேவை.

076 826 4859, 077 712 0945

வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறை நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. படவரைஞர் - Certificate in Draughtsman and Auto CAD 2D, 3D with Quantity surverying Experience.

Your CV and Covering letter must be send Before 10th July 2019

தொடர்புகளுக்கு
077 712 0945, 021 221 3663
No 09, Nanthavil Lane, Thavady, Jaffna.
Email: vacancynsc@gmail.com

UNIVERSITY OF JAFFNA
INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified biddersfor the following works.

No	Bid ID	Description of Work	Estimated Cost (Rs. In million) without VAT	Contract Period (No of Calendar Days)	Minimum Required ICTAD Grade	Required Bid Security Amount
1	YA/CWP/RE/ 2019-10	Providing Parking facilities for the Faculty of Engineering, University of Jaffna	3.1	60	C8or above	Rs. 31,000.00
2	YA/CWP/RE/ 2019-11	Road Network for Skill Development Center at Faculty of Agriculture, University of Jaffna	8.4	75	C7 or above	Rs. 85,000.00
3	YA/CWP/RE/ 2019-14	Modification of Anantha Kumarasamy Hostel Canteen, University of Jaffna	7.0	90	C7 or above	Rs. 70,000.00
4	YA/CWP/RE/ 2019-22	Construction of Semi-permanent building for Security Hut & Drivers rest room at Ariviyalnagar, University of Jaffna, Kilinochchi premises	3.9	60	C8 or above	Rs. 40,000.00
5	YA/CWP/RE/ 2019-23	Renovation of Anantha Kumarasamy hostel building University of Jaffna	14.8	90	C6 or above	Rs. 150,000.00

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna**and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna**from**03rd July 2019** until**17thJuly2019** from**9:00 hrs to 15:00hrsand** upon payment of a non-refundable fee of **Rupees Two thousand (Rs. 2000/-) for each bids No 1&4, Rupees Two thousand five hundred (Rs. 2,500/-) for each bids No 2 &3, Rupees Three thousand and Five Hundred (Rs. 3500/-) for bid No 5**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch** to reach**on or before 10.00 hrs on 18th July2019.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on 18th July 2019**at the Board Room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **90 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"*Competent Authority, University of Jaffna.*"**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning, University of Jaffna at 10.00 hrs on the 12thJuly, 2019.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,

மரண அறிவித்தல்

குணபாலசிங்கம் கமலாதேவி

பிறப்பு 18.06.1948 இறப்பு 01.07.2019

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிட மாகவும், தற்போது திருகோணமலையை வதி விடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் கமலாதேவி கடந்த (01.07.2019) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா சின்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற குணபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரமோகன் (கமலாலயம் சிற்பக்கலைக்கூடம்-திருகோணமலை), சந்திரவதனி (கொலண்ட்), சந்திரகுமார் (கமலாலயம் சிற்பக்கலைகூடம் - திருகோணமலை) சந்திரதாஸன் (கலைவாணி கலையகம்-திருநெல்வேலி), யோகேஸ்வரி, ஸ்ரீரங்கன் (Trinco Beach Hotel) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரசாந்தினி, சந்திரகுமார், செல்வஸ்ரீ, கலைவாணி, பகீதரன், மலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், நிலுக்ஷன், பானுஷா, பிருத்திகா, சபரீனா, சபரிஷன், சங்கவி, லோசன், அபிநயா, நிருஸ்றிகா, ரதுஸ்கா, மோனிஷா, சர்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் திருகோணமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48/85, இராஜராஜேஸ்வரி சதுக்கம்,
கண்டி வீதி, திருகோணமலை.

தகவல்:
பிள்ளைகள்.

T.P: 0777 061 798, 026 222 4303

மரண அறிவித்தல்

வீரகத்தி நல்லையா (குட்டித்தம்பி)



பிறப்பு 30.08.1926 இறப்பு 03.07.2019

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தாவடி அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நல்லையா (குட்டித்தம்பி) 03.07.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் விமலேஸ்வரியின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரி, விக்கினேஸ்வரி, இராசேஸ்வரி, காலஞ் சென்றவர்களான சிவபாலன், ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி மற்றும் விமலசிறி (வீரபத்திரர்), நகுலசிறி ஆகியோரின் அன்புத் தகப்பனும், ஸ்ரீ வேலாயுதன் காலஞ்சென்ற சாந்த குமார், சிவலோகநாதன், ஜீவரஜனி, பிரியந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், சீனிவாசகம், சோமசுந்தரம் மாணிக்க வாசகர், காலஞ்சென்ற நாகமணி, நாகலட்சுமி, வரதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகப்பிரியா உதயகுமாரன் உதயராஜ் நிலக்ஷி, சங்கித் கயலக்ஷன், அபிரா-சஞ்சிவன், சசிகரன், தனுஷா, தர்சன், அரவிந்தன், சாஷகான், சங்கவி, தர்மிகா, பகிரதி, வாகிசன், பைரவிகா சகானா, பிரதாபன் ஆகியோரின் பேரனும், லக்மிகா நடிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

துயர் பகிர்கின்றோம்

யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்
திருமதி வினோஷிராணி சக்திவேல்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
கமலேஸ்வரி வாமதேவன்
(ஆங்கில ஆசிரியர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

(IN 10580) (14.7)

கண்ணீர் அஞ்சலி

பிரதேச சமுர்த்தி வங்கிச்சங்க (மகா சங்கம்) உதவி முகாமையாளர்
திருமதி பவானி சந்திரமோகன் அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி சிவபாக்கியம் கதிரேசு
அவர்கள் 02.07.2019 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றது.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்- சாவகச்சேரி

9 ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
மனோன்மணி கந்தசாமி
(முறிவு, நெறிவு வைத்தியர்)

பிறப்பு	இறப்பு
04	29
12	06
1947	2010

ஓடி விட்டதம்மா ! ஒன்பது ஆண்டுகள்
ஓய்ந்து போகுமா ? உன் நினைவின் அலைகள்
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் - எம்
நெஞ்சை விட்டகலாதம்மா உன் அன்பு வதனம்

என்றும் சோகத்துயரில்
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாடசாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 06 . 09 . 1947
ஆண்டவன் அடியில் 15 . 06 . 2018

அமரர் பாலசுப்பிரமணியம் அப்புத்துரை
(இளைப்பாறிய விவாகப்பதிவாளர், நல்லூர்)
திதி:-04.07.2019

பன்னிரு திங்கள் பறந்தனவே இன்று
பாலா உன் பால்முகம் நாம் கண்டு
பாகாயுருகும் உன் துணை பரிதவிப்பது தெரியலையோ?
பாங்காக நீ வளர்த்த இரட்டையரின் கண்ணீரும் காணலையோ!

பேரனை நீ கண்டு பேருவகை கொண்டாயே
பேர்த்தி உன் வருகைக்காக காத்திருந்தாள் பாராயோ
பேணி உனை மதிக்கும் மருகர்கள் பாசமுடன் பார்த்திருக்க
பேசாமல் மௌனிப்பதுதான் முறையோ பாலா!

ஐங்கரனின் பாதமதை அடைந்திட்டாயோ
அவ்வின்பத்தில் எமை எல்லாம் மறந்திட்டாயோ
அப்பாவாய் வாழ்ந்தது போதுமப்பா
தப்பாமல் மழலையாய் வந்திடப்பா எம்மிடமே!

17/25 நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Glory To God Alone

HOLY FAMILY CONVENT, JAFFNA

PAST PUPILS' ASSOCIATION

Annual General Meeting - 2019

Date : 07.07.2019
Time : 3.30 pm
Venue: School Main Hall

All the members are kindly requested to be present.

Principal	Secretary
J/Holy Family Convent	Past Pupils' Association
Jaffna.	Jaffna.

பொது அறிவித்தல்
வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தில் நிரந்தரப் பணியாளர்களாகப் பணியாற்றியவர்களில் இதுவரை சங்கத்துடன் இணைந்து கொள்ளாதோர் உடனடியாகத் தங்களின் தகவல்களைத் திருமுறிகண்டியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் 20.07.2019 இற்கு முன்னதாகத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தகவல்களை உறுதிப்படுத்தாதோர் தாங்களாகவே பணி விலகியவர்களாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

தலைவர்,
கோ.கஜேந்திரசிங்கம்
வட பிராந்திய பாரஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம், திருமுறிகண்டி.

31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் எஸ்.எஸ்.சின்னத்தம்பி (ஓய்வுநிலை கிராம அலுவலர்)

தொன்மைகள் யாவும் சேர்ந்தே தெரியும்
தென்மராட்சியாம் சிறந்த தம்பதியின்
சின்னத்தம்பியாம் நாமம் கொண்டு
அன்று வந்தான் கரைச்சியாம் பகுதிக்கு
அன்றுமுதல் இறுதிவரை அருஞ்சேவை-எமக்களித்து
மன்றங்கள் கூட்டி மதிப்போடு உலாவந்து
என்றும் எளிமையுடன் எவருக்கும் சேவகனாய்
நன்றே பணிசெய்த நாயகனை நாம் கண்டோம்.
ஓயாது எந்நாளும் பெருஞ்சேவை யாற்றிநின்ற
உமக்கு வாயாற துதிக்கின்றோம் தம்பிரான்-திருவடியை

கலவெட்டித்திடல்
புளியம்பொக்கனை கிராமமக்கள்.

In loving memory of Poothathamby Pararajasingam It has been thirty years since God called him to His abode. It's strange how much we miss him even after the passage of so many years. We still look up to him and love him for who he was and for who he moulded us to be. Time has not managed to erase his memories from our lives. Lovingly remembered by his family, students and friends.

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை இலட்சுமி

இல.38/4, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இலட்சுமி 03.07.2019 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வினாசி பொன்னு ஆகியோரின் பாசமிகு புத்திரியும், நாகன் பொன்னு ஆகியோரின் அன்பு மருமகளும், நாகன் வேலுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கார்த்திகேசு ஆகியோரின் சகோதரியும், தர்மகுல சிங்கம், கமலராணி, லலிதாராணி, கேசவராணி, தயாபரசிங்கம், பிறேமராணி, தனராணி, பூவராஜன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07,2019) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

T.P: 076 615 5581, 077 634 0816

சாவுத் தண்டனை விவகாரத்தில் தடையிடுவதற்கு வெளிநாடுகளுக்கு உரிமை இல்லை

கொழும்பு, ஜூலை 4
போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு சாவுத் தண்டனை வழங்குவது இலங்கை அரசு சுயமாக நடைமுறைப்படுத்த முடியுமான ஒரு தீர்மானம் என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.
எக்காரணம் கொண்டும் இந்த தீர்மானத்தில் மூக்கை நுழைப்பதற்கு வெளிநாடுகளுக்கு அதிகாரம் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

பன்னாட்டு அளவில் சமூக வலைத் தளங்கள் நேற்று இரவு முடங்கின

கொழும்பு, ஜூலை 4
சமூக வலைத்தளங்கள் உலக நாடுகள் பலவற்றில் சரிவர இயங்காது நேற்று இரவு தடைப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.
உலகம் முழுவதும் பல கோடி பேரால் பயன்படுத்தப்பட்டுவரும் சமூக வலைதளங்கள் இங்கிலாந்து, ஐரோப்பா உள்ளிட்ட சில நாடுகளில் சரிவர இயங்காததால் அவற்றின் பயனாளர்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று பன்னாட்டுச் செய்திகள் குறிப் பிட்டுள்ளன.
இந்த இடைஞ்சல் காரணமாக சமூக வலைதளங்களில் புகைப்படங்களை தரவிறக்கம் செய்யவோ, பதிவேற்றம் செய்யவோ முடியாதிருந்தது. (ம)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03.07.2019 | வெற்றி வாரம் 2552 | வர்ணம் பச்சை
கடகம்
வெற்றி இலக்கங்கள் 3 24 37 48
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,721,752/=
04.07.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3204 | திகதி: 2019.07.03 | புதன்கிழமை
சனிதா சுவாமி சனிக்கிழமை அதிர்ஷ்டம் SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
05 06 12 28 Y | 35 | 49,838,700/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2019.07.06 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 658
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.07.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,457,845/-
வெற்றி இலக்கங்கள் 02 27 32 58 | ஆங்கில எழுத்து E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
அதா நிற டிக்கட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோமாளி ஜனிதா கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 463 | சீட்டிழுப்பு திகதி: 2019.07.02
வர்ணம்: இளஞ்சிவப்பு | செவ்வாய்க்கிழமை
J 06 55 66 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 129,914,613/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
தாமியாகி ஆரம் பதிவுக்கு 0114 825 825 ஐ அழைப்புங்கள்.
முக்கட் விரிமோகத்திற்கான உட்டை அழைப்பு 011 4 062 002 / 077 105 4894
பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 258
சீட்டிழுப்பு திகதி ▸ 03.07.2019 நீலம்
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 24 39 61 | விதி எண் 6
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,042,560/=
06.07.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

ஒருவரையொருவர் குறை காண்பதால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது

இந்துமதி

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனுபவிக்கின்ற வேதனை மிகவும் கொடியது. தமது கண்களுக்கு முன்பாகவே உறவுகளைப் பறிக்கொடுத்து நிற்கின்ற அவர்களது சோகம் எளிதில் தீரக் கூடியதல்ல. ஆனால் அரசு இவர்களின் விடயத்தில் தொடர்ந்து பாராமுகம் காட்டி வருகின்றமை எந்த வகையிலும் ஏற்கத் தக்கதல்ல.

போரைக் காரணம் காட்டி ஏராளமான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர்களும், படையினரிடம் சரணடைந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் தொடர்பான விடயங்கள் படையினர் வசம் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல அரசும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை. அரச தலைவரே காணாமல் ஆக்கப்பட்டவர்களென எவருமே இல்லையெனக் கூறிய நிலையில் அதற்கும் மேலாக எதைத்தான் எதிர்பார்க்க முடியும்?

ஆனால் சில அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் கூட்டமைப்பின் மீது பழியைப் போட்டுவிட்டுத் தாம் தப்பிப்பதற்கு முயற்சி செய்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடு இடம்பெற்ற மண்டபத்துக்கு வெளியே வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது. இவர்கள் தமிழரசுக்கட்சி மற்றும் கூட்டமைப்பினரை நிந்திக்கும் வகையில் நடந்து கொண்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது தம்முடன் கதைப்பதற்கு எவருமே முன்வர வில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாகவும் வேறொரு தகவல் தெரிவிக்கின்றது. ஆனால் அவ்வாறு எவராவது வந்திருந்தால் நிச்சயமாக அவர்கள் அவமானங்களை எதிர்கொண்டிருப்பார்கள். ஏற்கனவே கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் உருவபொம்மை எரிக்கப்பட்டதை நாம் மறந்து விட முடியாது.

கல்முனையில் தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவது தொடர்பான அரசின் செய்தியைத் தாங்கிச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு என்ன நடந்தது? திட்டமிடப்பட்ட வகையில் அங்கு அவர் அவமானப்படுத்தப்பட்டார். ஆனால் அதே செய்தியை ஞானசாரதேரர் கூறியபோது அங்கு கூடியிருந்தவர்கள் அமோக வரவேற்பை வழங்கினார்கள். இதுவரை காலமும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தேரர்கள் தீர்வு கண்டதாகச் சரித்திரமே கிடையாது.

ஆனால் கல்முனையின் களநிலவரம் வேறாக இருந்ததால் பௌத்த தேரர்களின் பிரசன்னம் அங்கு காணப்பட்டது. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமைக்கு அவர்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமையினமே முதன்மை காரணமாகும். இவர்கள் கட்சிரீதியாக மட்டுமல்லாது கொள்கை ரீதியாகவும் பிளவுபட்டுக் காணப்படுகின்றனர். பேரினவாதக் கட்சிகளுக்கு முண்டுகொடுப்பவர்களும் இங்கு இருக்கத்தான் செய்கின்றனர். அதுமட்டுமல்லாது பதவிகளுக்காகக் காத்திருப்பவர்கள் மற்றவர்களைத் தூற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் எப்போதுமே சுயநலமாகத்தான் செயற்படுகின்றனர். இனவாதத்தைப் பேசுவதன் மூலமாக மக்களின் ஆதரவைத் திரட்டுவதிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். பொதுவாகவே கூட்டமைப்பை அழித்துவிட்டால் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியுமெனவும் இவர்கள் நம்புகின்றனர்.

தமிழர்கள் ஒற்றுமைப்பட்டால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை. இவர்கள் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமாகப் பல விடயங்களைச் சாதிக்க முடியும். ஆனால் அதற்கான வாய்ப்பு இதுவரையில் கிடைக்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் தென்பகுதி ஆட்சியாளர்கள் எதையும் தாமாக முன்வந்து தமிழர்களுக்கு வழங்குவதற்குத் தயார் நிலையில் இல்லை. இனவாதிகளும் மதவாதிகளும் அதற்கு இடம்கொடுக்கும் நிலையிலும் இல்லை. அரசின் நிலையறிந்து தான் ஆயுத பலம் இல்லை என்பதால் அரசு எம்மை ஏமாற்ற நினைக்கக் கூடாதென கூட்டமைப்பின் தலைவர் கூறியிருக்கிறார். சம்பந்தன் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நீண்ட போரும், அது தந்த பேரழிவுகளும் தென்பகுதி அரசியல்வாதிகளிடையே மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அவர்கள் மற்றவர்களை மதித்து நடப்பார்களென இனியும் நம்புவதால் பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை. இந்த நாட்டில் இனவாதமும், மதவாதமும் தான் ஆட்சியைத் தீர்மானிக்கின்றன. இவற்றை மீறி எவராலும் எதையுமே சாதித்துவிட முடியாது.

ஆகவேதான் தமிழர்கள் ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டிருப்பது அவர்களின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். சிங்களவர்கள் மட்டுல்லாது முஸ்லிம்களும் தமிழர்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ள நிலையில் அவற்றை எதிர்கொள்வதற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். எமது பலவீனம் எம்மை அடியோடு கீழே சாய்த்துவிடுமென்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே எந்தவொரு பிரச்சினைக்கும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருப்பதை விடுத்து ஒற்றுமையாக ஒன்றிணைந்து போராடுவதே தீர்வுக்கு வழிவகுக்கும்.

மரண அறிவித்தல்

திருமதி தர்மலிங்கம் சரஸ்வதியம்மா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வசிப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சரஸ்வதியம்மா நேற்று (03.07.2019) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் செல்லாச்சி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் உலகாம்பிகை (பவா) கணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, பேரம்பலம், இராசம்மா, உலகநாதப்பிள்ளை திலகவதியம்மா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லத்துரை, சபாபதிப்பிள்ளை, தவமணி, காலஞ்சென்ற பூபதி மற்றும் மகேஸ்வரி, சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை கந்தசாமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் துஷாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வேலணை), பத்மரூபன் (கிராம உத்தியோகத்தர் வேலணை J/12,13), சுவேதிகா, யதுர்ஷனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கவிஷாந்தின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2019) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் (கருணை இல்லத்திற்கு அருகில்) சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
தகவல்: குடும்பத்தினர்.
077 078 5173, 077 524 7154

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்-ஒட்டுசுட்டான்

2019 ஆம் ஆண்டிற்கான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கான அறிவுறுத்தல்கள்.

☆வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோர் தமது வதிவிடத்தை தமது பகுதி கிராம சேவையாளரால் வழங்கபட்ட கடிதம் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
☆உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்கபட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தை (2019) சமர்ப்பித்தல் வேண்டும்.
☆உணவுப்பண்டங்களை விற்பனை செய்வோர் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
☆வியாபார நிலையங்களில் புகைத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
☆ஆலய வளாகத்தினுள் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த அறிவுறுத்தல்களுக்கமைய இன்று 2019.07.04ஆம் திகதி மாலை 2.00மணிக்கு ஆலயமுன்றலில் வர்த்தக நிலையங்களுக்கான இடங்கள் வழங்கும் நடவடிக்கை நடைபெறவுள்ளது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்-முகாமைத்துவ சபை.

மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

▸ காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
▸ காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
▸ பெற்றோர் விருப்பமின்மையா?
▸ கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
▸ வேலைத்தளத்தில் பிரச்சினையா?
▸ காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?
(இரகசியம் பேணப்படும்)

■ நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
■ உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
■ நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
வேலு ராஜேஸ்வரி அவர்கள்
மாத்தளை.
0778 432 602 / 075 302 4239
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
செய்திகள்

09

வியாழக்கிழமை 04 ஜூலை 2019

வடமாகாண விவசாயத்திணைக்கள அலுவலர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாண விவசாயத்திணைக்கள அலுவலர்கள் நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற மாகாண கணக்காய்வு குழுக் கூட்டம் தொடர்பாக உண்மைக்கு புறம்பான செய்திகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. இதற்குக் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தும் உண்மைக்கு புறம்பான தகவல்களை வழங்கும் அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் தாம் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர். இவ்வாறான சம்பவங்கள் அலுவலர்களுக்கு மனவருத்தத்தைத் தருகின்றன. இந்த விடயம் தொடர்பாக மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் ஆளுநர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

(மரி)

சாவுத் தண்டனையை நிறுத்துமாறு சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலை!

நாளைவரை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

சாவுத் தண்டனையை நிறுத்துமாறு கோரி சாவுத் தண்டனைக் கைதியொருவர் உச்சநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் நேற்றுச் சுமந்திரன் முன்னிலையானார். வழக்கு நாளை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கையில் மீண்டும் சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட முடிவினை எதிர்த்து இதுவரை 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஊடகவியலாளர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் முன்னிலையாகி இடைக்காலத் தடை உத்தரவு பெற்ற நிலையில் தற்போது மேலும் 12 வழக்குகள் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட 12 வழக்குகளில் சாவுத் தண்டனைக் கைதியொருவரின் வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது. ஏனைய 11 வழக்குகளும் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டன.

(ம-105)

குடமுழுக்கு

சாவகச்சேரி, ஜூலை 4

யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானை சிறி மீனாட்சி அம்பாள் ஆலய குடமுழுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு கிரியைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. நாளையும், நாளைமறுதினமும் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். பிரம்மசிறி லஷ்மிகாந்த ஜெகதீஸக் குருக்கள் தலைமையில் குடமுழுக்கு கிரியைகள் இடம்பெறும். (ஜ-9)

அலங்கார திருவிழா

சுழிபுரம், ஜூலை 4

யாழ்ப்பாணம் சுழிபுரம் பெரியபுலோ அரசடி சிறி சாமுண்டாதேவி சமேத சிறி ஞானபைரவஸ்வாமி ஆலய அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளன. (ஜ-9)

இடரால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டாம்கட்ட கொடுப்பனவு

பெயர்விவரம் வராதோர் ஏமாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 4

தென்மராட்சியில் கடந்த வருடம் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதில் பெயர் அறிவிக்கப்படாதவர்கள், தமது பெயர்கள் வந்திருக்கலாம் என்றுகருதி பிரதேச செயலகங்களுக்குச்சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் வீசிய கஜா புயல் மற்றும் அதன் பின்னர் பெய்த பெரு மழையால் பிரதேசத்தில் 588 குடும்பங்கள் பாதிப்பு உள்ளாகின. இவர்களின் விவரங்களை பிரதேச செயலகத்தினர் இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவித்திருந்தனர்.

அனைத்துக் குடும்பங்களுக்கும் முதல் கட்டக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குமாறு திணைக்களத்தால் நிதி அனுப்பி வைக்கப்பட்டு அவரவர்களின் வங்கிக் கணக்குக்கு காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கு அவர்களில் முதற்கட்டமாக 320 பேருக்கு அமைச்சு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் தனித்தனி காசோலை அனுப்பியது.

அவர்களின் பெயர் விவரங்கள் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டு பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பெயர் விவரங்கள் குறிப்பிடாத பல குடும்பங்கள் பிரதேச செயலகத்துக்குச் சென்று காசோலைப் பட்டியலில் தமது பெயர் இல்லையென்று அறிந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

அடுத்த கட்டத்தில் காசோலைகள் கிடைத்தும் அறிவிப்பதாக பெயர் விவரங்கள் வராதவர்களுக்கு செயலக அலுவலர்கள் கூறியுள்ளனர்.

(த-9)

ஆர்ப்பாட்ட காரர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

விவசாய திணைக்கள கணக்காய்வு கூட்டத்தின் போது ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு எதிராக ஆளுநர் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்று அவரின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

போராட்டங்கள், ஊர்வலங்களை மேற்கொண்டு தன் மீது ,எவரும் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது என்பதில் ஆளுநர் உறுதியாக உள்ளார். பொதுமக்களுக்கு சேவையினை வழங்கவேண்டிய அலுவலக நேரத்தில் அரச அலுவலர்கள் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அலுவலக நேரத்தில் முறையான விதிமுறைகளை கடைப்பிடிக்காது ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களில் ஈடுபடும் வடமாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட அரச அலுவலர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள ஆளுநர் திட்டமிட்டுள்ளார் என்றுள்ளது.

(ம)

வடமாகாண விவசாய திணைக்கள பிரச்சினை

விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை

ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற வடமாகாண விவசாய திணைக்கள கணக்காய்வு கூட்டத்தின்போது ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

குறிப்பிட்ட அந்த சம்பவத்தில் பெண் அலுவர் ஒருவர் தாக்கப்பட்டதனை வன்மையாக கண்டிக்கும் ஆளுநர், இவ்வாறான சம்பவங்கள் இனி வடமாகாணத்தில் இடம்பெறாத வகையில் முன்னெடுக்க கூடியதான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளேன் என்று மேலும் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாண விவசாய அமைச்சின் செயலரை ஆளுநர் பணித்திருந்ததுடன் அந்த அறிக்கை தற்போது ஆளுநருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

(ம)

மருதமடுவில் தரமற்ற உணவு இருவருக்கு நீதிமன்று தண்டம்

தலைமன்னார், ஜூலை 4

மருதமடு பெருவிழாவின் போது பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்களை வைத்திருந்த இருவருக்கு மடு சுற்றுலா நீதிமன்று தண்டம் விதித்தது.

கடந்த 23ஆம் திகதி தொடக்கம் 2ஆம் திகதி வரை மருதமடு ஆலய பெருவிழா நடைபெற்றது. பக்தர்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்பட்டது. உணவுக் கடைகளும் மிக சொற்பமாகவே காணப்பட்டன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அவற்றைச் சோதனையிட்டனர்.

ஒருவர் காலாவாதியான உப்பு மற்றும் பிஸ்கட் பொதிகளை வைத்திருந்தார் என்றும், மற்றைய கடையில் பழுதடைந்த பருப்புக் கறி மற்றும் றோல்ஸ் காணப்பட்டன என்றும் குற்றஞ்சாட்டி அவர்கள் சுற்றுலா நீதிமன்றில் அண்மையில் முன்னார் முற்படுத்தப்பட்டனர்.

நீதிவான் முன்னிலையில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். முதலாவது குற்றச்சாட்டு நபருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இரண்டாவது குற்றச்சாட்டு நபருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(த-60)

ஆனி பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

நீர்வேலி தெற்கு மனோண்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனி பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்குச் சிறப்பு அபிசேக பூசை வழிபாடுகள் இடம்பெற்று பிற்பகல் 6 மணிக்குப் பொங்கல் வழிபாடு இடம்பெறும்.

(ம-17)

குடமுழுக்கு

வடமராட்சி மேலைப்புலோலி தம்பசிட்டி மலையந்தோட்டம் திருவருள்மிகு சிறி முருகன் ஆலய குடமுழுக்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 11.43 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு கிரியைகள் நேற்று அதிகாலை முதல் ஆரம்பமாகின.

பளை அறத்தி அம்மன் ஆலய முதன்மைக்குரு ஈசானசிவாச்சாரியார் தேசமான்ய சிவஸ்ரீ ந. பிரபாகர சிவாச்சாரியார் குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து குடமுழுக்கை நடத்திவைப்பார். (ஜ-173)

மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வியாழக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமம், எருவன், வறணி, மந்துவில், மிருசுவில் வடக்கு, குடமியன், கறுக்காய், கரம்பகம், நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, மாசேரி, இயற்றாலை, அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி, இலங்கை வங்கி சுன்னாகம், மருதனார்மடம் நுண்கலைபீடம் ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, ஆடைத்தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் மருத்துவமனை, சின்னசிப்பிகுளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

குடாநாட்டில் இந்த வருடம்

ஐந்து ஹெக்டேயர் நிலப்பரப்பில் இளையகுட்டி வாழைச் செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இம்முறை ஐந்து ஹெக்டேயர் வரையிலான நிலப்பரப்பில் இளைய குட்டி வளர்ப்பு வாழைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஐம்பது வீத மானிய விலையில் இந்த இளைய வளர்ப்பு வாழைக் குட்டிகள் வழங்கப்படவுள்ளன என மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலும் மற்றும் அனலைதீவு பகுதியிலும் இதற்கென 20 செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட விவசாயி ஒருவருக்கு 110 வரையிலான கதலி, கப்பல் இன இளைய வளர்ப்பு வாழைக்குட்டிகள் மானிய விலையில் வழங்கி வைக்கப்படவுள்ளன. இம்முறை முதற்தட வையாக அனலைதீவு பிரதேசத்திலும் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட செய்கையாளர்கள் பரீட்சார்த்தமாக இந்த இளைய வளர்ப்பு வாழைச் செய்கையில் ஈடுபடவுள்ளனர்.

குடாநாட்டில் ஏற்கனவே இந்த இளைய வளர்ப்பு வாழைச் செய்கை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு அவை வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

மின்மானி பொருத்தவென காசோலைகள் வழங்கல்

மன்னார், ஜூலை 4

மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் மற்றும் தேவன்பிட்டிகிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 59 குடும்பங்களுக்கு மின் இணைப்பு மானிகள் பொருத்தப்படவுள்ளன. அதற்கான காசோலைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இவற்றுக்கென்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனின் பாதீட்டிலிருந்து 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காசோலை அந்தக் கிராமத்தில் வைத்து குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மன்னார் பிரதேச சபை தலைவர் எம்.முஜாஹிர், மீள் குடியேற்ற செயலணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் முஜீபுர் ரஹ்மான், மாந்தை மேற்கு பிரதேச சபைத் தலைவர் சந்தியோகு, இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாண பணிப்பாளர் என். எம். முனவ்பர், மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் நந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-56)

தொடர் சொற்பொழிவு

கிளிநொச்சி பூநகரி, முட்கொம்பன், காளி அம்பாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இன்று தொடக்கம் 10 நாள்களுக்கு தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

ஆன்மிக சொற்பொழிவாளரும் கிளிநொச்சி மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி அலுவலருமான பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

தினமும் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள சொற்பொழிவில் இன்று 'அவதாரம்' என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது. (ஜ)

சேவைநலன் பாராட்டு

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தில் நூலகராக கடமையாற்றிய திருமதி தயாநிதி பாலச்சந்திரன் தனது 30 வருடம் நூலக சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ஜ-9)

கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகி 4 பேர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 4

கருங்குளவிகளால் தாக்கப்பட்ட பெண்ணின் அவலக்குரல் கேட்டு ஓடிச்சென்ற அயலவர்களும் குளவிக் கடிக்கு இலக்காகினர். இரண்டுபெண்கள் உட்பட நால்வர் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தென்மராட்சி கச்சாய் தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அருகருகே வீடுகள் அமைத்து வசித்துவருகின்றனர். நேற்றுமுன்தினம் காலை திடீரென்று அவலக்குரல் கேட்டதும் அவரது சகோதரிகளும் அவர்களில் இருவரின் கணவன்மாரும் அங்கே ஓடியுள்ளனர். எனினும் அவர்களையும் குளவிகள் மொய்த்துக் கொட்டியுள்ளன.

அதே இடத்தைச் சேர்ந்தவர்களான பத்மநாதன்செல்வராசா (வயது-61), சுப்பிரமணியம் செல்லம்மா (வயது-71), வைத்தியநாதன் பூபதி (வயது58), பெருமாள் பத்மநாதன் (வயது -71) ஆகியோரே பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த இதுபோன்ற குளவி கொட்டிய சம்பவத்தில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்திருந்தார். (ஜ-9)

ஆண்டு நிறைவு விழா

கொடிகாமம், ஜூலை 4

யாழ்ப்பாணம் அரியாலை சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழா நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மன்றத்தின் தலைவர் செல்வி சனுஜா இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக பன்னாட்டு இந்துமதகுருமார் ஒன்றியத்தலைவர் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

வரவேற்பு நடனம், தலைமையுரை என்பன இடம்பெற்று பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஜ-159)

மாணவர்களின் மாதிரிச் சந்தை

கொடிகாமம், ஜூலை 4

யாழ்ப்பாணம் கொடிகாமம் அரசினர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மாதிரிச் சந்தை பாடசாலையில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு அதிபர் ப.தர்மபூபதி தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலய கல்வி அலுவலக கணிதபாட ஆசிரிய ஆலோசகர் சிறிகணேசன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சிவதாசன் ,ஓய்வுபெற்ற அதிபர் ந.நவரட்ணராஜா, ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி ச.நவரட்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாதிரி சந்தையில் பங்குபற்றிய அனைத்து ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கும் ஊக்குவிக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஜ-159)

சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

கலைப்பரிதி க.சின்னராஜன் எழுதிய தண்ணீர் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை அல்வாய் மெதடிஸ்த ஆலய பொது மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். எழுத்தாளர் மு.அநாதரட்சகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாகித்திய ரத்தினா தெணியான் கலந்துகொள்ளவுள்ளார். (ஜ)

பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் சங்கத் தலைவராக மீண்டும். ப. கேசவதாசன்தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக. பொ. நகுலேஸ்வரன், நிர்வாக. உறுப்பினர்களான சி. பரமானந்தராசா, வ. முத்துராசா, கா. பார்த்தீபன், செ. குஹாசொருபன், செல்வி. அனஸ்ரிகா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஜ-63)

கிணற்றுக்குள் வீழ்ந்த யானை அதிகாரிகளால் மீட்கப்பட்டது

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு ஒதியமலைப் பகுதி விவசாயக் காணி ஒன்றிலுள்ள கிணற்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை காட்டு யானை வீழ்ந்துள்ளது. அது பின்னர் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

யானை வீழ்ந்து தத்தளிக்கின்றமைபற்றி கிராம வாசிகள் முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரிவித்தனர். வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கிணற்றில் வீழ்ந்த யானையைப் பாதுகாப்பாக மீட்டனர்.

இந்தப் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகள் மக்களின் பயன்தரு வாழ்வாதார மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை அழித்து நாசமாக்கிறன.

பல தடவைகள் யானைத் தொல்லையைக் கட்டுப்படுத்தக் கோரியும் யானை வேலி அமைக்கக்கோரியும் இதுவரை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அங்கு கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

(த-ரி3)

மாணவிக்கு ஈருருளி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

தந்தையை இழந்துவறுமை நிலையில் கல்விகற்றுவரும் யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி மாணவி ஒருவருக்கு ஈருருளி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ் இளவாலையைச் சேர்ந்த திருமதி சுரேஸ் நிசாந்தியால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஜ-222)

பன்னாட்டு கூட்டுறவு தினவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் வலிகாமம் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 97 ஆவது பன்னாட்டு கூட்டுறவு தினவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் முற்பகல்10.30 மணிக்கு சங்கத் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், கிராமிய பொருளாதார ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-63)

குளவிக் கொட்டுக்கு இலக்காகி மாணவர்கள் மருத்துவமனையில்

வவுனியா, ஜூலை 4

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் ஒன்பது பேர் உட்பட 10 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வவுனியா சிதம்பரபுரம் நாகராஜா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பாடசாலை விட்டு மாணவர்கள் வெளியே சென்ற போது குளவி கொட்டுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் காவலாளி உட்பட ஒன்பது மாணவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை விட்டு வெளியேறியபோது பாடசாலையிலிருந்து 300மீற்றர் தொலைவிலுள்ள தனியார் காணியின் வேம்பு மரத்திலிருந்து கலைந்ததில் குளவி கொட்டியதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து வலயக் கல்விப்பணிப்பாளருக்கு தகவல் வழங்கியுள்ளதாகவும் தற்போது அப்பகுதி இயல்பு நிலைக்குத்திரும்பி யுள்ளதாகவும் பாடசாலையின் அதிபர் இ. தமிழழகன் தெரிவித்துள்ளார். (ஜ)

சுற்றுலாவுக்கு ஏற்ற நாடுகளில் இலங்கை தொடர்ந்தும் உள்ளது

லோன்லி பிளனெட் அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 4

சுற்றுலாப் பயணத்துக்கு ஏற்ற இடமாகவும், இந்த ஆண்டில் பயணம் மேற்கொள்வதற்கு அழகான நாடுகளின் பட்டியலில் இலங்கை இன்னமும் முன்னணியில் இருப்பதாகவும் 'லோன்லி பிளனெட்' தெரிவித்திருக்கிறது.

'ஏன் நான் இன்னும் இலங்கையின் மீது நம்பிக்கையை இழக்கவில்லை, ஏன் நீங்களும் அதனை இழக்கக்கூடாது?' என்ற தலைப்பில் 'லோன்லி பிளனெட்' வெளியிட்டுள்ள கட்டுரையிலேயே தற்போதும் சுற்றுலாப் பயணத்துறைக்கு ஏற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணியில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இலங்கை சுற்றுலாப் பயணத்துறையை பொறுத்தவரையில் மிகவும் பிரசித்தி பெற்றதொரு நாடாகும். அந்த அழகிய நாடு கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களினால் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது லோன்லி பிளனெட். தாக்குதல்களின் பின்னர்

அங்கு பயணிப்பதற்கான இணையத்தளம் மூலமான முன்பதிவுகள் சராசரியாக 186 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததாக சுற்றுலாப் பயணத்துறை போக்குவரத்து ஆலோசனை வழங்கல் நிறுவனமொன்று தெரிவித்திருக்கிறது என்றும் கூறியிருக்கிறது.

'இலங்கைக்குச் செல்வதற்கு சுற்றுலாப் பயணிகள் அச்சப்படுவதையும், அவர்களின் தயக்கத்தையும் எம்மால் குறைத்து மதிப்பிட முடியாது.

அதேவேளை அண்மைய வாரங்களில் பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கை தொடர்பில் விடுத்திருந்த தமது பயண எச்சரிக்கைகளைத் தளர்த்தியிருக்கின்றன. இலங்கையில் ஒரு சிக்கலான நிலை காணப்படுகின்ற போதிலும் கூட, சுற்றுலாப்பயணத்துறைக்கு ஏற்றதொரு நாடாகவே அது தற்போதும் உள்ளது. இந்த ஆண்டில் பயணம் மேற்கொள்ளத்தக்க சுற்றுலாத்துறைக்குப் பெயர்போன எமது நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணியில் இருக்கிறது' என்று லோன்லி பிளனெட் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. (ஒ.5)

சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

வவுனியா, ஜூலை 4

'வித்துவம்' சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் நேற்றுக் காலை இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் கோ. குலேந்திரகுமார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கல்வி, விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் ஜ.எம்.கனீபா கலந்துகொண்டு வெளியீட்டு வைத்திருந்தார்.

நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவை பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஜ-222)

செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

வலி.மேற்கு, ஜூலை 4

யாழ்ப்பாணம் மானிப்பாய் கோவிற்பற்று இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் இன்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

சங்கச் செயலர் ஜ.விஜயகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிச் செயலர் திருமதி செல்வகுமார் நேசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி மானிப்பாய்கிளை முகாமையாளர் திருமதி மெஜிதா தினேஷன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர் திருமதி தயல்வழி கணேசராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-115)

ஐயன்கங்குளம் மருத்துவமனையில் மருத்துவ விடுதிக்கு அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயன்கங்குளம் மருத்துவமனைக்கு மருத்துவ விடுதி அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நீண்டகாலமாக குறித்த மருத்துவமனையில் மருத்துவ விடுதி இல்லாமையால் கிராம மக்கள் சிகிச்சை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது விடுதி அமைக்கப்படுவதால் கிராம மக்கள் நன்மையடையவுள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறிஸ்காந்தராசாவின் முயற்சியில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விடுதி அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறிஸ்காந்தராசா மருத்துவமனை பொறுப்பு மருத்துவர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஜ-ரி3)

ஓய்வூதிய நிதி அதிகரிப்பு ஓகஸ்ட் மாதம் கிடைக்கும்

ஓய்வூதியர்களுக்கு அரசு அறிவித்த ஓய்வூதிய அதிகரிப்பு வரும் ஓகஸ்ட் மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்பட உள்ளது. நிலுவையும் சேர்த்தே வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகங்கள் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் ஓய்வூதியர்களின் விவரங்களைத் தயாரித்து வருவதால் அவற்றை கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பி அங்கிருந்து அதிகரித்த ஓய்வூதியம் ஓகஸ்ட் மாதமே கிடைக்கும் என்று பிரதேச செயலகங்களின் தகவல்கள் தெரிவித்தன.

வரவு - செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (த-9)

நூல் கண்காட்சியும் விற்பனையும்

வாசிப்பை மேம்படுத்தும் முகமாக சுன்னாகம் பொது நூலகம், குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து நூல் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வை நடத்தவுள்ளது. இந்த நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் கலந்துகொண்டு கண்காட்சிக் கூடத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஜ)

எரிகாயமடைந்த குடும்பப் பெண் சாவு

அடுப்பில் தீ மூட்டவென்று அடுப்பில் ஊற்றிய எண்ணை உடுப்பில் பட்டதால் குடும்பப் பெண் எரிந்து உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் மன்னார் விளாத்திகுளம் மடுப் பகுதியில்இடம்பெற்றுள்ளது.இதே இடத்தைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் ஜெனிற்றா (வயது - 30) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 24ஆம் திகதி வீட்டில் சமையலில் ஈடுபட்டிருந்தபோது தீ காயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில்சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக கடந்த 29ஆம் திகதி யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது முதலாம் திகதி உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் விசாரணை மேற்கொண்டார். (த-105)

விபத்தில் காயப்பட்டவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

மன்னார் தாராபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த கார்லஸ் மேரிடயஸ் கார்லிங்டயஸ் (வயது - 22) என்பவரே சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

கடந்த முதலாம் திகதி உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த அவர், தனக்கு முன்னே பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்த் திசையிலிருந்து வந்த இ.போ.ச பேரூந்துடன் மோதி சுமார் 23 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு படுகாயமடைந்தார். அவர் உடனடியாக மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அன்றிரவு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அன்றிரவே உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் விசாரணை நடத்தி சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார். (த-105)

வீதி சீரமைப்புக்கு அடிக்கல்

அளவெட்டி,ஜூலை 4

யாழ்ப்பாணம் கல்வளை பாலத்தடி வீதியின் சீரமைப்புப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் வலி தென்மேற்கு.பிரதேசசபை உறுப்பினர் லோ.றமணன் மற்றும் காளிஅம்பாள் ஆலய தலைவர் து.ஜெசிந்தன் சனசமூகநிலைய உறுப்பினர்கள் கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். குறித்த வீதி நீண்டகாலமாக மணல்வீதியாக இருந்துவந்தது. தற்போது இவ்வீதி 'கொங்கிறிற்' வீதியாகச் சீரமைக்கப்படவுள்ளது. (ஜ-63)

ஆங்கில தின நிகழ்வு

யாழ்ப்பாணம் அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வு பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில்நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்திணைக்கள மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி ரதனி பாலசுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார். (ஜ-422)

நிறுவுநர் தினமும் பூங்கா திறப்பும்

அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் 188 ஆவது நிறுவுநர் தினமும், சிறுவர் பூங்கா திறப்பு நிகழ்வும்இன்றுவியாழக்கிழமை டானியல் பூவர் அரங்கில் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சோ.மாவை சேனாதிராசா, வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தகுமார், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் க.மயூரதன் ஆகியோர் கலந்து கொள்வர். ஆசியுரையை அளவெட்டிஅமெரிக்கமிசன் சிலோன் திருச்சபை வண.பிதா வி.ராஜ்குமாரும், நிறுவுநர் நினைவுரையை மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை அதிபர் து.ஜீவானந்தனும் வழங்கவுள்ளனர். (ஜ-36)

முல்லைத்தீவில் நவீன மீன்பிடி முறைக்கு எங்களுக்கும் அனுமதி பெற்றுத் தாருங்கள்

இரணைப்பாலை, மாத்தளன் பகுதி மீனவர்கள் குமுறல்

வவுனியா, ஜூலை 4

முல்லைத்தீவு உதவிப்பணிப்பாளரால் தென்னிலங்கை மீனவர்களுக்கு எந்தக் கேள்வியுமின்றி நவீன மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் இரணைப்பாலை, மாத்தளன் போன்ற பகுதிகளில் நவீன மீன்பிடித்தொழிலுக்கு நீரியல் வளத்துறைத் திணைக்களம் அனுமதி மறுக்கிறது. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கும் இரணைப்பாலை கடற்றொழில் கிராம அபிவிருத்திச் சங்கம், இதற்குத் தீர்வு பெற்றுத் தருமாறுகோரி மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவுசெய்துள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்கு உதவிசெய்வதில்லை, தங்களை மனித உணர்வோடு மதிப்பதில்லை என்றும் சங்கம் சாடியுள்ளது.

இது பற்றி இரணைப்பாலை கடற்தொழில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தாவது:

போருக்கு முன்னர் நாங்கள் பழமையான முறையில்தான் கடற்றொழில் செய்து வந்தோம். நவீன முறையிலான தொழில் எங்கள் பிரதேசத்துக்கு வரவில்லை. நாங்கள் 15 குதிரைவலு சக்தியுடைய இயந்திரத்தைக்கூட இயக்குவதற்கு முடியாத நிலையில் இருந்தோம்.

பழைமையான தொழில் முறையைப் பயன்படுத்தி தொழில் செய்வதால் எமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதநிலை காணப்பட்டது.

இந்தச்சந்தர்ப்பத்தில்தென்னிலங்கை மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய கடற் பகுதிகளில் நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் முறையில் நிறைவான இலாபத்தைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

2016 ஆண்டு நாங்கள் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திடம் சென்று எமது மாவட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட முறையில்தொழில் மேற்கொள்ளவேண்டுமென்று கோரியிருந்தோம். அந்தத் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்கள், வலைகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்த பின்னர் எங்களுடன் கதைக்குமாறு கூறியிருந்தார்கள்.

இயந்திரங்களையும் வலைகளையும் கொள்வனவு செய்வதற்குப் போதுமான பணம் அந்தக் காலத்தில் எங்களிடம் இருக்கவில்லை.

2017ஆம் ஆண்டு எங்களிடமிருந்த நகைகளையும், காணிகளையும், சொத்துக்களையும் விற்றும் வங்கிகளில் கடன் வாங்கியும் குறித்த கடற்றொழில் இயந்திரங்களையும், வலைகளையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்தோம்.

கிட்டத்தட்ட ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் 20 தொடக்கம் 25 இலட்சம் ரூபா வரையில் செலவாகியிருக்கின்றது. எங்களுக்கு நவீன முறையில் மீன்பிடிக்க அனுமதி தந்தார்கள் எனினும், நவீன மீன்பிடி முறைகளில் அனுபவம் இல்லாத காரணத்தால் பெரிதாக இலாபம் கிட்டவில்லை.

நவீன முறையான குறித்த தொழில் அந்த வருடம் எமக்குப் பயிற்சியாகவே இருந்தது. நாங்கள் அந்தத் தொழிலைப் பழகிக்கொண்டோம்.

2018 ஆண்டு ஏப்ரலில் குறித்த தொழிலைச் செய்வதற்கான அனுமதியை நீரியல் வளத்திணைக்களத்திடம் பெற்றுக் கொண்டோம். மூன்று மாதங்கள் குறித்த தொழிலைச் செய்யமுடியாது இருந்தபோதிலும் அதன் பின்னர் நாங்கள் இலாபத்தைப் பெற்றுக் கொண்டிருந்தோம்.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரான து.ரவிகரனும் கள எப்பாடு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த மீன்பிடி சங்கங்களும் இணைந்து முன்னர் ஆர்ப்பாட்டம் நடத்தி சுருக்குவலைத் தொழிலை நிறுத்தவேண்டும், கடல் அட்டை, சங்கு பிடிப்பவர்களை நிறுத்தவேண்டும், வெளிச்சம் பாவித்து மீன்பிடிக்கும் தொழிலையும் நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சரும் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமும் முல்லைத்தீவு உதவிப்பணிப்பாளரும் இணைந்து எமக்கு கூட்டம் நடத்தியிருந்தனர்.

அதில் அரசியல்வாதிகள் பலர் வந்து சுருக்குவலைத் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி, குழுவொன்று அமைத்து பரிசீலனை செய்து மீண்டும் தொழிலுக்கான அனுமதியைத் தருவதாகக் கூறியிருந்தனர்.

கள்ளப்பாடு மற்றும் அதனையண்மித்த மீனவர்களின் கருத்து நாங்கள் குறித்த தொழிலைச் சட்டவிரோதமாகச் செய்கின்றோம் என்பதே.

குளோரினைக் கரைத்து கடலில் ஊற்றுகிறோம் என்றும் சலவைத்தூளைக் கரைத்து கடலில் ஊற்றுகின்றோம் என்றும் குற்றம் சுமத்தினர்.

எங்களைப் பொறுத்தவரையில் கடலில் அப்படியான செயற்பாடுகள் ஒன்றும் செய்யமுடியாது. அது அவர்களின் அறிவில்லாத தன்மையென்றுதான் நினைக்கின்றோம்.

இவர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிசோதனையின் பின் மீண்டும் எமக்கு அனுமதிதந்தனர். பின்னர் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த அனுமதியை 6 நாள்களுக்குள் நிறுத்திவிட்டனர். அன்று நிறுத்தப்பட்ட அனுமதி இதுவரை எமக்கு கிடைக்கவில்லை.

ஆனால் தென்னிலங்கையில் இருந்துவரும் படகுகளுக்கு பணிப்பாளர் நாயகம் ஒரு கடிதம் வழங்கினால்முல்லைத்தீவு உதவிப்பணிப்பாளர் ஏன் என்று ஒரு கேள்வியுமின்றி அனுமதியைக் கொடுக்கின்றார்.

அட்டை, சங்கு, வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சின்னக்கண் வலை பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்றனவற்றுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் எமக்கு அனுமதி தருவதில்லை.

இது தொடர்பில் உதவிப் பணிப்பாளரிடம் கேட்டால் பணிப்பாளர் நாயகம் கூறினால் மாத்திரமே அனுமதி வழங்கமுடியும் என்றுகூறுகின்றார். நீங்கள் (உதவிப் பணிப்பாளர்) இந்த மாவட்டத்துக்கு பொறுப்பான அதிகாரி. பணிப்பாளர் நாயகம் சொல்வதை மட்டும் நீங்கள் செய்வதாக இருந்தால் நீங்கள் இருக்கவேண்டிய தேவை இல்லை என்று நாமும் கூறினோம். ஆனால் இன்றுவரை அதற்கான பதில் வரவில்லை.

நாங்கள் தொழில் செய்வதற்காக வைத்த அடைவுகள், வங்கிக் கடன்கள் போன்றனவற்றால் கடனில் மூழ்கிவிட்டோம். எமக்கு இன்னும் மூன்று மாதங்கள்தான் தொழில் வாய்ப்பு இருக்கின்றது. உண்மையிலேயே எமக்கு குறித்த தொழிலுக்கான அனுமதி மறுக்கப்பட்டால் நாங்கள் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

எமது இந்த முடிவுகளுக்கு நீரியல்வளத்துறைத் திணைக்களமும் கடற்றொழில் அமைச்சுமே காரணமாக அமையும்.

திருகோணமலை, கொக்கிளாய், முகத்துவாரம்போன்ற பகுதிகளுக்கு குறித்த தொழிலுக்கான அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் எமக்கு மட்டும் ஏன் குறித்த அனுமதி மறுக்கப்படுகின்றது.

இலங்கையைச் சூழவுள்ளகடற்பரப்பில் அனுமதி வழங்கப்படும் நிலையில் ஏன் முல்லைத்தீவுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படுகின்றது?

திருகோணமலை மாவட்டத்தில் மீனவர்கள் எங்கள் கடலில் மீன் பிடிக்கின்றனர். எங்களைப் பழைய முறையில் மீன்பிடிக்குமாறு கூறுகின்றார்கள். அப்படித் தொழில் செய்வதற்கு கடற்பரப்பு எங்கள் வசம் இல்லை. தென்பகுதி தொழிலாளர்கள் 2 கிலோமீற்றர் கடற்பரப்புக்குள் 500க்கும் மேற்பட்ட படகுகளைக் கொண்டு வலைபோட்டு 40 குதிரைவலுவுடைய இயங்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கின்றனர். இதற்கு யாரும் இடையூறாக இல்லை. இந்த நிலையில் எங்களையும் குறித்த கடற்பரப்புக்குள்ளேயே தொழிலைச் செய்யச்சொன்னால் எப்படிச் செய்வது?

மீள்குடியேற்றப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை முல்லைத்தீவில் கிராமப்புறமாக உள்ள மீனவர்களான நாம் ஒதுக்கப்பட்டு வருகின்றோம். கூட்டமைப்பைச் சேந்த அரசியல்வாதிகளும் மற்றைய அரசியல்வாதிகளும் எங்களை மனிதஉணர்வோடுபார்ப்பதில்லை என்றுதான் சொல்வோம் என்று தலைவர் மேலும் தெரிவித்தார். (த)

தனித்திருந்த பெண் மீது எண்ணெய் ஊற்றிய நபர்

குடும்பத் தலைவர் ஒருவர் தன்மீது துர்நடத்தையில் ஈடுபட முற்பட்டார் என்றும் அதிலிருந்து தப்பித்ததும் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றியதோடு தீமூட்ட முற்பட்டார் என்றும் குடும்பப் பெண் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி தனன்களப்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. எண்ணெய் ஊற்றியதால் சிகிச்சை பெறுவதற்காக தற்போதுசாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

சுருக்குவலைத்தொழிலுக்கு கொழும்பின் அனுமதியில்லை

முல்லை மீனவர்களின் முறைப்பாட்டுக்கு உதவிப் பணிப்பாளர் இப்படிக் கூறுகிறார்

முல்லைத்தீவு, ஜூலை 4

கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடமிருந்து அனுமதி கிடைக்காததால்முல்லைத்தீவுமாவட்ட மீனவர்களுக்கு சுருக்கு வலைத் தொழிலுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று முல்லைத்தீவுமாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கி.கலிஸ்ரன் தெரிவிக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைப்பாலை, மாத்தளன், பொக்கணை பகுதி மீனவர்கள் இந்த ஆண்டுக்கான சுருக்கு வலை அனுமதியைத்தருமாறு முல்லைத்தீவுமாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்திடம் கோரியுள்ளார்கள்.

இதற்கான அனுமதி இதுவரை கொடுக்காதநிலையில்மனிதஉரிமைஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார்கள்.

இது தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டுகுறித்தமீனவர்களுக்கு சுருக்குவலைக்கான அனுமதிகொடுக்கப்பட்டுள்ளது. அதன்போது அதனைத் தடைசெய்யக் கோரி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

இதன் பின்னர் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் நேரடியாக வந்து பார்வையிட்டு குறித்த அனுமதியை நிறுத்துமாறு பணித்துள்ளார். அதன் பின்னர் இது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுத்து அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்கள். அது தொடர்பிலான தீர்மானம் எதுவும் கொழும்பு அமைச்சிடம் இருந்து கிடைக்கவில்லை. அதனால் எவருக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்று தெரிவித்தார்.

(கு-ரி3)

பாடசாலைக்கு ஒரு தொகை பொருள்கள் கையளிப்பு

வவுனியா.ஜூலை 4

வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தின் சுகாதார மேம்பாட்டுக்கு தேவையான ஒரு தொகை பொருள்கள் கையளிக்கப் பட்டன.

பாடசாலை பழைய மாணவர் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில்

சமூக சேவைகளை செய்து வரும் கோவிந்தராசா சதிஸ்குமார், திருமதி யமுனா சதிஸ்குமார் ஆகியார் இந்த உதவியை வழங்கியுள்ளனர். (ஐ-222)

முச்சக்கரவண்டி கையளிப்பு

முல்லைத்தீவு அளம்பில், தங்கபுரம் பகுதியைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய ஒருவருக்கு முச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டது.

வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில், புலம்பெயர் அமைப்பான கலி போர்னியா வாழ் தமிழர்களால், நாளைய முல்லைத்தீவு அமைப்பினூடாக இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-246)

மைத்திரிக்கு அச்சுறுத்தல்

தேசிய பாதுகாப்பின் பலவீனமே காரணம்

கூறுகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜூலை 4

தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளமை தேசிய பாதுகாப்பு எந்த அளவுக்குப் பலவீனமாக உள்ளது என்பதை தெளிவுப்படுத்துகின்றது. புலனாய்வு பிரிவின் ஊடாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல்களை அரச தலைவர் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை தொடர்ந்து தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், இந்தத் தகவல்களை புலனாய்வு பிரிவினரிடமிருந்து கிடைக்கப் பெற்றதாகவும், அரச தலைவர் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

நாட்டுத் தலைவர், முப்படைகளின் பிரதானியாக உள்ள அரச தலைவருக்கு பாதுகாப்பு இல்லாவிடின் நாட்டு மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்படும். அரசதலைவரின் கருத்தைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பின் பலவீனம் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது, என்றார். (ஒ.5)

தொடருந்துப் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூலை 4

இன்று நள்ளிரவு முன்னெடுக்கப்படவிருந்த 24 மணித்தியால பணிப்புறக்கணிப்பை சட்ட ஆலோசனையின் பிரகாரம் கைவிட்டுள்ளதாக தொடருந்துத் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள முரண்பாடு தொடர்பில் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக தொடருந்துத் திணைக்களப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பை இன்று நள்ளிரவு நடத்த திட்டமிட்டிருந்தனர். தொடருந்து சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளமையால் தொடருந்து சேவைப் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சின் செயலர் மற்றும் தொடருந்து பொதுமுகாமையாளருக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக, போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகளால், தொடருந்து பொதுமுகாமையாளர் பதவிவிலகுவதற்குத் தீர்மானித்திருந்ததாக இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து தமக்கு அறியக்கிடைத்ததை அடுத்து, இதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு தாம் நடவடிக்கை எடுத்ததாகவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்திருந்த போதிலும், பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமை தொடர்பில், அதில் பங்கேற்ற ஊழியர்களிடம் கருத்துக்களை கோரியுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் மேலதிக பொதுமுகாமையாளரின் தலைமையில் எழுத்துமூலம் குறித்த ஊழியர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்திருந்த நிலையில், ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்தமை தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5)

மடுவில் புனித தூயகப்பகுதி அமைக்க அடிக்கல் நடப்பட்டது

மன்னார்,ஜூலை 4

மடுமாதா திருத்தலத்தின் பகுதியை விசாலமாக்கும் திட்டத்தின் கீழ்புதிய தூயகப் பகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வீடமைப்பு, கட்டுமானப் பணி, கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாசவின் நிதி ஒதுக்கீட்டில் தூயகப்பகுதி அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச வருகை தந்து பணிக்கான நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து அடிக்கல்லை நடுகை செய்தார். மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல்பெர்ணான்டோ ஆண்டகை, மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ. மோகன்றாஸ், கலாசார அமைச்சின்செயலர் பேணாட். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை, மடுத்தி ருத்தலப் பரிபாலகர் அருட் பணி. ச.ஜோசெப்பி சோசை, கலாசார அமைச்சின் பணித்திட்ட இயக்குனர் திரு மதி.தாரனி அனோஜா கமகே, அரசின் அபிவிருத்தி, கட்டுமானம், ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான முதல்வர் பொறியியலாளர் ஜெயச்சந்திரன், மடு பிரதேச செயலர் மற்றும் பல உயர் நிலைபணியாளர்களும்கலந்து கொண்டனர். (ஐ-56)

கருத்தமர்வு

நல்லிணக்க பொறிமுறையில் நிலைமாறுகால நீதி மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பான கருத்தமர்வு இடம்பெற்றது.

கைதடி மேற்கு சரஸ்வதி வைரவிழா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு வலயம் மற்றும் சரஸ்வதி இளைஞர் கழகம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி மேற்கு கிராம அலுவலர் நா.தர்சினி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி,சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் செ.ஜெயபாலன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ கந்தசாமி, மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் க.சிறிதரன், கைதடி பலநோக்கு கூ.ச.தலைவர் பா.செல்லத்துரை, சரஸ்வதி சன சமூக நிலையத் தலைவர் வே.மோகன்தாஸ், கைதடி தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஜெ.தயானி கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

பாதுகாப்புக் கடவை கோரி கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி 155ஆம் கட்டைச் சந்தியில் தொடருந்துக் கடவையில் பாதுகாப்புக் கடவை அமைத்துத் தருமாறு கோரி கிளிநொச்சியில் நேற்றுக்காலை போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி நடந்த விபத்தில் படையினர் 6பேர் உயிரிழந்திருந்தனர். இந்த நிலையில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டம் நடத்திய மக்களை கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் தொடருந்துத் திணைக்கள அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஒலியுடன் கூடிய பாதுகாப்பு வெளிச்சத்தை அமைத்து பாதுகாப்பான போக்குவரத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகள் கூறியபோதும், மக்கள் அதற்கு இணங்கவில்லை.

மின்சாரத்தில் இயங்கும் பாதுகாப்புக் கடவையை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை எழுத்து மூலமாக வழங்குமாறும், தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் தொடருந்துத் திணைக்கள அதிகாரிகள் கூறினர். அதன் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது. அதன்பின்னர் தொடருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பின. (க-35)

கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட ஜேர்மன் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி

கிளிநொச்சி, ஜூலை 4

ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஜோர்ன் ரோட்டே நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள ஜேர்மன் தொழில்நுட்ப கல்லூரிக்கு பயணம் மேற்கொண்டிருந்த அவர் தற்போது உள்ள நிலைகள் தொடர்பில் தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் மற்றும் கல்லூரி சமூகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

குறித்த தொழில்நுட்ப கல்லூரிக்கான ஒரு பகுதி உத்விகள் ஜேர்மன் அரசிடமிருந்தும்,மற்றைய பகுதி இலங்கை அரசிடமிருந்தும் கிடைத்து வந்தன.•

நாட்டில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலின் பின்னர் மாணவர் வருகை குறைவு மற்றும் இலங்கை அரசின் உதவி கிடைக்காமை ஆகியவற்றால் கல்லூரியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதியின் வருகை முக்கியம் வாய்ந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6)

பொலிஸ் நிலைய தடுப்புக்காவல் கொலை வழக்கில்

ஐந்து பொலிஸாருக்கும் எதிரான குற்றப்பத்திரத்தை நிராகரியுங்கள்

எதிரிகளின் சட்டத்தரணிகள் யாழ். மேல்நீதிமன்றில் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபரான சுமணனை தடுப்புக்காவலில் வைத்து சித்திரவதை செய்து பின்னர் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கும் எதிரான குற்றப்பத்திரத்தை நிராகரிக்குமாறு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நேற்று விண்ணப்பம் செய்யப்பட்டது.

"சந்தேகநபர்கள் ஐவரும் சுமணனைச் சித்திரவதை செய்த குற்றத்துக்கு சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். அதனால் அவர்களுக்கு எதிராக சுமணனைக் கொலை செய்த குற்றச்சாட்டை முன்வைப்பது சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானது. அதனால் கொலைக் குற்றச்சாட்டு குற்றப்பத்திரிகையை மன்று தள்ளுபடி செய்யவேண்டும்" என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றுரைத்தனர்.

வழக்கை விசாரிப்பதற்கு வேறொரு நீதிபதியை நியமிக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவரான தலைமை நீதியரசருக்கு விண்ணப்பம் செய்திருந்தார்.

அதனடிப்படையில் இந்த வழக்கை விசாரிப்பதற்கு யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவுத் லெப்பை அப்துல் மனாப் நியமிக்கப்பட்டார்.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி தாவுத் லெப்பை அப்துல் மனாப் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

தி.சரநாயக்க முதியன்சேலாகே சிந்தக்க நிஷான்த பிரியபண்டார, ராஜபக்ச முதியன்சேலாகே சங்ஜீவ ராஜபக்ச, கோன்கலகே ஜயன்த, ஞானலிங்கம் மயூரன் மற்றும் வீரசிங்க ஆகிய ஐந்து எதிரிகளையும் அநுராதபுரம் சிறைச்சாலை அலுவலர்கள் மன்றில் முற்படுத்தினர். அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் துஷித் ஜோன்சன், ஜே.பி.ஏ. ரஞ்சித்குமார், அக்ரம் ஆகியோர் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார்.

இதன்போதே எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மேற்படி விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தனர்.

"இந்த வழக்கை மூத்த சொலிஸ்டர் ஜெனரல் குமார ரட்ணம் நெறிப்படுத்துவார். அவர் மன்றில் முன்னிலையாக தவணை வழங்கப்படவேண்டும்" என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றுரைத்தார்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மன்று வழக்கை செப்ரெம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

பின்னணி

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னரான காலப் பகுதியில் இடம்பெற்ற 35 லட்சம் ரூபா மதிக்கத்தக்க திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சிறிஸ்கந்தராஜா சுமணன் முதலாவது சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டார். எனினும் விசாரணைக்காக கிளிநொச்சி, வட்டக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட சுமணன் பொலிஸ் காவலிலிருந்து தப்பித்து இரணைமடுக் குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸாரால் கிளிநொச்சி நீதிவான் மன்றில் அறிக்கையிடப்பட்டது.

இந்தச் சம்பவம் 2011ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மாலை இடம்பெற்றதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஏனைய 4 சந்தேகநபர்களுக்கு எதிராகவும் பெரும் குற்ற வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையின்போது சந்தேகநபர்கள் இருவர், சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் மீது சுமணனை சித்திரவதை செய்து கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மல்லாகம் நீதிமன்றின் அப்போதைய நீதிவான் அ. ஜோ்சன் சந்தேகநபர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸாரிடம் விசாரணை மேற்கொண்டு சித்திரவதை மற்றும் கொலை ஆகிய இரு பிரிவுகளில்வழக்குகளைமுன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். அத்துடன், சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும் நீதிவான் அறிவித்தல் வழங்கினார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்ட சிந்தக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கும் எதிராகக் கொலைக் குற்றச்சாட்டுப் பத்திரத்தை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முன்வைத்தனர்.

அத்துடன், சட்ட மா அதிபர் திணைக்களத்தால் பொலிஸ் அதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸாருக்கும் எதிராக 1994ஆம் ஆண்டு சித்திரவதைகள் சட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் 2017ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தநிலையில் 2017ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

2 பொலிஸார் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் தி.சாநாயக்க முதியன்சேலாகே சிந்தக்க நிசான்த பண்டார உள்ளிட்ட 6 பேரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர்.

1994ஆம் ஆண்டு 22ஆம் இலக்க சித்திரவதை களுக்கு எதிரான மாநாட்டுச் சட்டம், இலங்கை சித்திரவதைகள் சட்டம், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சித்திரவதைகளுக்கு எதிரான தீர்ப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள், பன்னாட்டு நீதிமன்ற போர்க் குற்றத் தீர்ப்புக்கள், உகண்டா நீதிமன்ற சித்திரவதைக்கு எதிரான தீர்ப்பு உள்ளிட்ட வைக்கு அமைவாக 6 குற்றவாளி களுக்கும் அதிகூடிய தண்டனையாக தலா 10 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்கள பிரதி மன்றாடியார் அதிபதி குமார் ரட்ணம், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் சிறிஸ்கந்தராசா சுமணனைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் 5 பொலிஸாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பகர்வுப் பத்திரம் மீதான சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. அதன் நிறைவில் சந்தேகநபர்கள் ஐவருக்கும் எதிராக கொலைக் குற்றச்சாட்டில் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, 2016ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி கட்டளையிட்டார்.

வழக்கு மேல் நடவடிக்கைக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு பாரப்படுத்தப்பட்டது. சட்ட மா அதிபர் திணைக்கள மூத்த அரச சட்டவாதி 5 பொலிஸ் அலுவலர்களுக்கும் எதிராக தண்டனைச் சட்டக்கோவை 296இன் கீழ் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

ஐவருக்கும் எதிராக சிறிஸ்கந்தராஜா சுமணனை ராமநாதபுரம் என்னுமிடத்தில் வைத்து தண்டனைச் சட்டக்கோவை 140ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கக்கூடிய காயம் விளைவித்த குற்றச்சாட்டும் மற்றும் அதே இடத்தில் வைத்து அவரைக் கொலை செய்தமைக்காக 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய கொலைக் குற்றச்சாட்டும் என்பன உட்பட 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையில் 10 சிவில் சாட்சிகள், 2 இராணுவ அதிகாரிகள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி உட்பட 40 சாட்சிகள் இணைக்கப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவும் சாட்சிப் பட்டியலில் உள்ளடங்குகின்றார்.

(த-37)

திருட்டுக் குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியா, ஜூலை 4

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் வீடு புகுந்து நகை மற்றும் பணம் திருடினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் யாருமில்லாத நேரம் நுழைந்து 18பவுண் நிறையுடைய நகைகள் மற்றும் 33ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணை மூலமாக கிளிநொச்சியைச் சேர்ந்த 19வயதுடைய ஒருவரையும், ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த 20வயதுடைய ஒருவரையும் கைது செய்துள்ளோம் என்று நேற்றுத் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த)

அத்துமீறிய விதைப்புகள் உள்ளனவாவென்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 4

வவுனிக்குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கைக்கு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாது என்ற நிலையில் மேலதிக மற்றும் அத்துமீறிய விதைப்புக்கள் உள்ளனவா எனக் கண்டறியும் நோக்கில் அளவீடுகள் இடம்பெறுவதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனிக் குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கை பண்ணக்கூடியதான நிலம் 6 ஆயிரம் ஏக்கர் உள்ளது. இருப்பினும் 2019ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 304.5 ஏக்கர் நிலம் சிறுபோகச் செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிறுபோகச் செய்கை ஆரம்பிக்கும்போது குளத்தில் 22.6 அடி தண்ணீர் காணப்பட்டது. இன்று 13.6 அடி நீரே காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு சிறுபோகத்தின் அறுவடை அடுத்த மாதம் நடுப் பகுதியிலேயே ஆரம்பமாகும். இதனால், குளத்தில் காணப்படும் தண்ணீர் விதைக்கப்பட்ட நெற் பயிருக்கு போதுமானதா எனக் கண்டறியவும் மேலதிக, அத்துமீறிய விதைப்புக்கள் உண்டா எனக் கண்டறிவதற்காகவுமே தற்போது முழுவீச்சில் அளவீடுகள் இடம்பெறுகின்றன.

அவ்வாறு மேலதிக விதைப்பு அல்லது அத்துமீறிய விதைப்பு கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவர்களுக்கான தண்ணீரை நிறுத்த அனைத்து நடவடிக்கையும் எடுப்பதோடு அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைக்காகவும் மாவட்டச் செயலர் ஊடாக நடவடிக்கை இடம்பெறும் - என்றார்.

(ஐ-105)

ரிசாத் மனைவியின் கணக்கில் பல கோடி ரூபா பரிமாற்றம்

விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 4

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் மனைவி கிதெர் மொஹமட் சஹாப்தீன் ஆயிசாவிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக நிதிமோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபா நிதி பரிமாற்றம் இடம்பெற்றமை தொடர்பாகவே இந்த விசாரணை இடம்பெறுவதாக, நிதிமோசடி விசாரணைப் பிரிவு நீதிமன்றில் தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவு வழங்கிய முறைப்பாடுக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையைச் சேர்ந்த பெண்ணுக்கு வங்கி கணக்குக்கு, தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் இருந்து ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

மருத்துவமனையில் கைதாகிய
பூஜித, ஹேமசிறிக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 4

குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்ணாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர இருவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் கொலைக்குற்றச்சாட்டு உட்பட பல்வேறு குற்றச்சாட்டு தொடர்பான சந்தேகநபர்களாகக் கருதி, நீதிமன்றில் முன்னிலையாகுமாறு சட்டமாக அதிபரால் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

இருப்பினும் இவர்கள் இருவரும் சுகவீனம் காரணமாக அதாவது, ஹேமசிறி பெர்ணாண்டோ கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் பூஜித் ஜயசுந்தர நாரஹேன்பிட்ட பொலிஸ் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இதனை அடுத்து மருத்துவமனைக்குச் சென்ற குற்றப்பு லனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட னர். இதன்பின்னர் மருத்துவமனைக்குச் சென்றகொழும்புமுதன்மை நீதிவான் லங்கா ஜயரத்ன அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

ஸஹ்ரானின் போதனையில் கலந்துகொண்ட குற்றச்சாட்டில் கைதானவருக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 4

தடைசெய்யப்பட்ட தேசிய தௌஹித் ஜமாத்தின் மார்க்க போதனை நிகழ்வில் கலந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட மனு நேற்றுப் புதன்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் மீதான வழக்கை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முன்னெடுப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

அவரை பிணையில் விடுவிக்குமாறு கோரிய சட்டத்தரணிகள், அதற்கான நியாயங்தளை முன்வைத்து வாதிட்டனர்.

இவற்றை செவிமடுத்த நீதிவான் சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டுஆள்பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், இவ்வழக்கு முடியும் வரை ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்று பணித்ததுடன், வெளிநாட்டுப் பயணங்களுக்கும் தடையுத்தரவு பிறப்பித்தார்.

வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

ஸஹ்ரானின் போதனையில் கலந்துகொண்டாரெனும் குற்றச்சாட்டில், கடந்த மே மாதம் 29ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.நில்சாத் எனும் சந்தேகநபர், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

கடைக்காரரைத் தாக்கிவிட்டு
பணம் எடுக்க முயன்ற நபர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்புத்துறை, ஜூலை 4

பலசரக்குக் கடையில் உரிமையாளரைத் தாக்கிப் பணம் அபகரிக்க முற்பட்டார் என்று குற்றஞ்சாட்டி அங்குள்ளவர்கள் ஒருவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

கடைக்கு வந்த இளைஞனொருவன் வெற்றிலை மற்றும் சில பொருள்களைக் கேட்டுள்ளார். கடை உரிமையாளர் அவற்றை எடுக்கும்போது கடைக்குள் புகுந்து அவரை அடித்து வீழ்த்தி பணப்பெட்டியிலுள்ள பணத்தை திருட முற்பட்டார். அந்த நேரம் கடை உரிமையாளர், திருடன் திருடன் என்று கூக்குரல் எழுப்ப சந்தேகநபர் ஈரு ருளியை எடுத்துத் தப்பியோடியுள்ளான்.

அயலவர்களும் வீதியில் பயணித்தோரும் நீண்ட தூரம் துரத்திச் சென்று சந்தேகநபரை மடக்கிப்பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற பொலிஸார் சந்தேகநபரை அழைத்துச் சென்றனர். அவர் விசாரணை யிலுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேபோன்று கடந்த வாரமும் பாண்டியன்தாழ்வி லுள்ள மருந்தகமொன்றுக்கு வந்த இரு இளைஞர்கள் ஊசி மருந்து கேட்டுள்ளனர்.

விற்பனையாளர் உள்ளே சென்றபோது பணப்பெட்டியில் இருந்த 4ஆயிரம் ரூபாவைத் திருடிச் சென்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (த-135)

ஆளுநரின் மக்கள் சந்திப்பு மன்னாரில் நடைபெற்றது

ஆளுநர் கலந்துகொள்ளவில்லை

மன்னார், ஜூலை 4

மன்னாரில் வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் சந்திப்பு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். எனினும், ஆளுநர் கலந்து கொள்ளவில்லை என்றும் அதனால் சந்திக்கச் சென்ற மக்களில் சிலர் மற்றும் ஆளுநரைச் சந்திக்கவிருந்த தொண்டர் ஆசிரியர்கள் ஏமாற்ற மடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் சந்திப்பு மாவட்டம் தோறும் இடம் பெற்று வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்குமாகாணத்தைச்சேர்ந்தஅரசதிணைக்களங்களின் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் வருகை தந்திருந்தனர்.

ஆளுநர் கலந்துகொள்ளாதமை பற்றி அவரின் ஊடகப் பிரிவிடம் கேட்டபோது, அளுநரின் சந்திப்புக்கள் சகல இடங்களிலும் நடைபெற்றாலும் எல்லாவற்றிலும் ஆளுநர் கலந்துகொள்வதில்லை. ஆனால் சகல அமைச்சுக்களினதும் செயலர்கள் கலந்துகொள்வர். மக்கள் தடையின்றி தமது பிரச்சினைகளை முன்வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

அரசடி வீதியின் பகுதியை ஒருவழிப் பாதையாக்கவும்

மாநகர சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் அரசடி வீதியின், பலாலி வீதியின் கந்தர் மடம் சந்தியில் இருந்து காங்கேசன்துறை வீதி வரையான தட்டாதெருச் சந்தி பகுதியை ஒரு வழிப் பாதையாக மாற்றுமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலகத்தினர், யாழ்ப்பாண மாநகர சபைக்கும் பொலிஸாருக்கும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு இதன் மூலமாக பயனளிக்கும். அதனால் ஒரு வழிப்பாதையாக மாற்றுமாறு குறித்த பாடசாலைகளின் பெற்றோர்கள் கல்வி அமைச்சின் செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த வீதியின் ஊடாக பாடசாலை நேரங்களில் கனரக வாகனம் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டு அதற்கான அறிவித்தல் வீதியில் நடப்பட்டுள்ளது. எனினும், அதனை கனரக வாகனங்களின் சாரதிகள் கவனத்தில் கொள்வதில்லை.

அந்த வீதியில் 3 இடங்களில் வீதிக் கடமையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுகின்றனரெனினும், இதனைக் கண்டுகொள்வது கிடையாது. இதனால் மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர் எனப் பலரும் பெரும் சிரமத்தையும் ஆபத்தையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே குறித்த வீதியை ஒரு வழிப் பாதையாகமாற்றுமாறு கல்வித் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். (த-105)

ஆலய சுற்றுவீதி அடிக்கல்

கொடிகாமம், ஜூலை 4

இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கான சுற்றுவீதி அமைக்கும் வேலைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், கலாநிதி ஆறுதிருமுருகன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கோப்பாய் பிரதேசசபை உறுப்பினர் இ.செல்வ ராஜா மற்றும் ஆலய குருக்கள், ஆலய பரிபாலன சபையினர், நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கப்பட்ட 2 கோடியே 80 லட்சம் ரூபா செலவில் மேற்படி வீதிசீரமைக்கப்படவுள்ளது. (ஜ-159)

சிவபூமி அரண்மனையின் ஆண்டு நிறைவு வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

நாவாற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, தொடர்ந்து பத்து நாள்களுக்கு தினமும் ச ங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை இந்த அபிஷேகங்கள் இடம்பெறவுள்ளன. கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு சிறப்பு கலச அபிசேகம் 108 சிவலிங்கப் பெருமானுக்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

சோபாவை ஆராய இரண்டு குழுக்கள்

மகிந்த நியமித்தார்

கொழும்பு, ஜூலை 4

அமெரிக்காவுடன் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள சோபா உடன்படிக்கையின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப் பதற்காக, இரண்டு குழுக் களை எதிர்க்கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ச நியமித் துள்ளார்.

சோபா உடன்பாட்டால், அர சியல், பொருளாதாரம் மற் றும் சமூக ரீதியாக நாட்டுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான இந்தக் குழுவில், வெளிநாட்டு உற வுகள் மற்றும் கொள்கைசார் நிபுணர்கள் நால்வர் இடம் பெற்றுள்ளனர்.

இரண்டாவது குழுவில் அரச தலைவர் சட்டவாளர் கள் மூன்று பேர் இடம்பெற் றுள்ளனர். இந்தக் குழு, உடன்பாட்டால், நாட்டின் சட்டத்துறையில் ஏற்படக் கூடிய தாக்கங்களை ஆய்வு செய்து, அறிக்கையைத் தயாரிக்கவுள்ளது.

இந்தக் குழுவினர் மகிந்த ராஜபக்சவை சந்தித்த பின் னர் தமது பணிகளை ஆரம் பிக்கவுள்ளனர். (ஒ.5)

சோபாவை தேர்தல்வரை ஒத்தி வைக்கவேண்டும்

மைத்திரியின் நிலைப்பாடு இது என்கிறார் தயாசிறி

கொழும்பு, ஜூலை 4

2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் முடி வடையும் வரை, அமெரிக் காவுடனான சோபா உடன் பாடு குறித்த இறுதி முடிவை தாமதிக்க வேண்டும் என் பதே அரச தலைவர் மைத் திரிபாலவின் நிலைப்பாடு என்று அவரது சார்பில் கருத்து வெளியிட்ட சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது: மிலேனியம் சவால் நிதிய உடன்பாடும் கூட, அரச தலைவர் தேர்தல் நடத்தப்படும் வரை தாம தித்க வேண்டும்.

தற்போது செய்து கொள்ளப் பட்டுள்ள கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்பாட்டை பின்பற்ற வேண்டியது கடப்பாடாக இருந்த போதும், சோபா மற்றும் மிலேனியம் சவால் நிதிய உடன்பாடுகளை நிறுத்தி வைக்க முடியும். எந்த வொரு சூழ்நிலையிலும் இந்த இரண்டு உடன்பாடுக ளுக்கும் அனுமதி அளிக்கப் போவதில்லை என்று அரச தலைவர் கூறியுள்ளார். எனவும் அவர் தெரிவித் தார். (ஒ.5)

சம்பந்தனின் கருத்தை திரிபுபடுத்த வேண்டாம்

கோருகிறார் மனோ

கொழும்பு, ஜூலை 4

அரசால் ஏமாற்றப்பட்டதன் அதிருப்தியில் தமிழ் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்களை ஊடகங் கள் திரிபுபடுத்தக்கூடாது என்று அமைச்சர் மனோகணே சன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டி ருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இனப்பிரச்சினைக்கு அரசி யல்தீர்வை முன்வைக்காதுதொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்து வருவதற்கு எதிராக கடும் ஆத்திரம் வெளியிட்டிருந்தார். தமி ழீழ விடுதலைப் புலிகளைப் போல் ஆயு தம் ஏந்தினாலா அரசியல்தீர்வை சிங்கள தலைமைகள் முன்வைக்கும் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

சம்பந்தனின் இந்தக் கருத்து ஊடகங்க ளில் வெளியான பின்னர் தென்னி லங்கை அரசியல் களத்தில் பேசுபொரு ளாக மாறியுள்ளது. இதுகுறித்து அமைச் சர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

சம்பந்தன் தெரிவித்த கருத்துக்களை திரிபுபடுத்தவேண்டாம். சம்பந்தனுக்கு வயதாகிவிட்டது. எதிர்பார்ப்புக்கள் சுக்கு நூறாகி விட்டது. ஒரே நாட்டுக்குள் வாழ்வோம் என்கிற நிலைப்பாட்டுக்கு அவர் வந்தார். ஆயுதப் போராட்டம் வேண்டாம் என்று பகிரங்கமாகவே அறிவித்தார். அவர் எதிர்கட்சித் தலை வர் பதவியை ஏன் ஏற்றார் என்றால் இலங்கையில் ஆட்சிக்குள் தமிழ் மக் கள் வந்துவிட்டதை நாட்டுக்கு காண்பிப் பதற்காகவே அந்தப் பொறுப்பை ஏற் றார். எனினும் எவரும் அதனை உண ரவில்லை.

தனிநாடு தேவையில்லை, இனப்பிரச் சினைக்குத் தீர்வாக ஆயுதங்களை கையிலெடுக்க மாட்டோம் என்றார். அவற்றை கைவிட்டு வந்தவருக்கு நாங் கள் என்ன கொடுத்தோம். ஒன்றையும் கொடுக்காமல் அவர்களை வெறுங்கை யுடனேயே வடக்கு, கிழக்குக்கு அனுப் பிவைத்தோம்.

அதனால் சோர்வுற்று பேசியுள்ளார். இப்போதும் கூட அரசியல்வாதிகள் சோர்வுற்ற பின்னர், இந்த நாட்டை வெள்ளையர்கள் ஆட்சி புரிந்திருந்தால் நலமாகியிருக்கும் என்று அதிருப்தியில் கூறுகிறார்கள். அதுபோலவே சம்பந் தன் கூறியதும் கலக்கமடைந்து அதிருப் தியில் கூறிய பேச்சாகும். இப்போது வடக்கு - கிழக்கு பகுதிகளுக்குச் சென்று ஆயுதப் போராட்டமோ அல்லது தனி நாட்டு சிந்தனை குறித்து யாரர்வது பேசினால் தடிகளைக் கொண்டு தான் தாக்குவார்கள் என்பது நிச்சயம் - என் றார். (ஒ.5)

கதிர்காமக் கந்தனின் மகோற்சவம் ஆரம்பம்

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது. அத்துடன், உகந்தைமலை சிறி முருகன் தேவஸ்தான வருடாந்த ஆடிவேல் மகோற்சவ திருவிழாவும் நேற்றுக் காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கான பாதயாத்திரையும் ஆரம்பமாகியுள்ளது.

உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாதயாத்திரை கதிர்காமக் கந்தன் ஆலயத்தை நேற்றுச் சென்றடைந்துள்ளது.

கதிர்காம கந்தனின் பெருவிழாவில், எதிர்வரும் 12ஆம் திகதி தீ மிதிப்பு நடைபெறவுள்ளதுடன், 17ஆம் திகதி நீர்வெட்டுடன் திருவிழா நிறைவடையவுள்ளது. உகந்தைமலை சிறி முரு கனுக்கு 18ஆம் திகதி காலை 8 மணிக்கு சமுத்திரதீர்த்தோற்சவம் நடைபெற்று அன்றுமாலை கொடியிறக்கம், திருக்கல்யாணம், திருப்பொன்னூஞ்சல் விழாவும் இடம்பெறவுள்ளன. (ஒ.5)

502 பேர் இரண்டாம் கட்டமாக பயிற்றுவிப்பாளர்களாக நியமனம்

கொழும்பு, ஜூலை 4

பாடசாலை விளையாட்டுத் துறையைக் கட்டியெழுப்பும் நோக்கில் முதல் கட்டமாக 3 ஆயிரத்து 386 பேர் விளை யாட்டு பயிற்சி பயிற்றுவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டதுடன் இரண்டாம் கட்டமாக 502 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலை மையில் மஹரகம தேசிய கல்வியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வரலாற்றில் முதற் தடவையாக 3 ஆயிரத்து 888 பேர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களாக பாடசாலை கட்டமைப் புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்,

பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் திறமை கொண்டோரை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக பாடசாலை கட்ட மைப்புக்குள் உள்சேர்த்துள்ளோம். செயற்திறன்மிக்க விளையாட்டுவீரர்களை பயிற்றுவிப்பாளர்களாக பாடசாலை களுக்கு இணைத்துக்கொண்டமையை எண்ணி நான் மகிழ்ச்சி அடைக்கின்றேன். பல்வேறு நிகழ்ச்சி நிரல்களை கொண்டோர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியம னத்துக்கு எதிர்ப்பு வெளியிட்ட போதும் நாம் முயற்சியை கைவிடவில்லை - என்றார். (ஒ.5)

மகிந்தவின் காலத்து ஊழல் அறிக்கையை வெளியிடுவேன்

மிரட்டுகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 4

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சிறி லங்கன் வானூர்திச் சேவையில் இடம் பெற்ற ஊழல், மோசடிகளைக் கண்ட றிவதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்கு முவின் அறிக்கை எனக்கு கிடைத் துள்ளது. இங்கு இடம்பெற்ற ஊழல், மோசடிகளை நாடாளுமன்றத்திலும், மக்களிடத்திலும் வெளிப்படுத்துவேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில், மகாவலி குடி யேற்றவாசிகளுக்கு காணி உறுதி களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டையும் மக்களையும் பாதுகாப்ப தற்காகவே அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். எந்தவொரு தனி நபரையும் பாதுகாப்பதற்காக நான் தெரிவு செய்யப்படவில்லை. ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கான நடவடிக் கைகளை அனைத்து மட்டங்களிலும் முன்னெடுப்பதே எனது நோக்கமாகும். உயர்மட்ட அரசியல் தலைவர்கள் மேற்கொள்ளும் கோடிக்கணக்கான நிதி மோசடிகள் முதல் ஏழை விவசா யிக்கு காணியுறுதியை வழங்கும்போது தமது பைகளை நிறைத்து க் கொள்ள முயற்சிப்பவர்கள் வரையானோரை என்னால் பொறுத்துக்கொள்ள முடி யாது. நாட்டில் அனைத்து வகையான ஊழல், மோசடிகளையும் ஒழிப்பதற்கா கவே 2015ஆம் ஆண்டு சுமார் 62 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் அரச தலைவர் தேர்தலின்போது என்னை அரச தலைவராகத் தெரிவு செய்தனர். ஊழல், மோசடிகளை இல்லாதொ ழித்து நாட்டைக் கட்டியெழுப்பும் நடவ டிக்கைகளை மேற்கொள்ளும்போது என்னை பதவியில் அமர்த்த உதவிய வர்களைப் போன்றே எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் எமக்கு எதிராக உள் ளனர். ஆளுங்கட்சியா? எதிர்க்கட் சியா? என்ற பேதம் எனக்கில்லை. அனைத்துக் குற்றவாளிகளுக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். இன்று ஆளுங்கட்சியில் உள்ளவர்க ளைப் போன்றே எதிர்க்கட்சியில் உள் ளவர்களும் என்னைக் குறைகூறு வதற்கான காரணம் ஊழல், மோசடி களை இல்லாதொழிப்பதற்கு முன்னெ டுக்கும் வேலைத்திட்டமே.

போதைப்பொருள் கடத்தற்காரர்களின் பின்னால் நீதிமன்றங்களுக்குச் செல் லும் அரச சார்பற்ற நிறுவனங்களால் எனக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பரப்புரைகளையும் நாட்டுக்கு எதிரான உடன்படிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரி விக்கும்போது சீலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களையும் கவனத்திற் கொள்ளாது நாட்டையும் மக்களின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புதல் தொடர்பில் மாத்திரமே கவனம் செலுத் தியுள்ளேன் - என்றார். (ஒ.5)

முன்னாள் போராளியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் ஹிஸ்புல்லாவிடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 4

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா திட்டமிடப்பட்ட குற்றங்களை தடுக்கும் பிரிவில் நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை தொலைபேசியில் அச்சுறுத்தியமை தொடர்பாக திட்டமிடப்பட்ட குற்றங்களை தடுக்கும் பிரிவில் நேற்றுப் புதன்கிழமை முன்னிலையாகி ஹிஸ்புல்லா வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஹிஸ்புல்லா தனக்கு தொலைபேசி ஊடாக உயிர் அச்சு றுத்தல் விடுத்ததாக கந்தசாமி இன்பராசா கடந்த 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி திட்டமிட்ட குற்ற ஒழிப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு ஹிஸ்புல்லாவை பதவி விலகுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து அவர் விலகி யமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தாதீர்

மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் அரசதலைவருக்குக் கடிதம்

கொழும்புத்துறை, ஜூலை 4

இலங்கையில் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதைக் கண்டித்தும் குறித்த முடிவை நிறுத்துமாறும் கோரியும் யாழ்ப்பாண மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் அரசதலைவருக்கு அவசர கோரிக்கை விடுத்துக் கடிதம் அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போதை வஸ்துக் கடத்தல் மற்றும் விற்பனை, பயன்பாடு என்பன எமது இளையோரைச் சீரழிப்பதோடு நாட்டில் இடம்பெறும் வன்செயல்களுக்கும் மனித மாண்புக்கும் எதிரான செயற்பாடுகளுக்கும் காரணமாக இருக்கின்றன. இவை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனினும் இவற்றுக்கு தூக்குத் தண்டனை தீர்வாக முடியாது.

தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்படும் நபரின் குடும்பங்கள் மற்றும் உறவுகள் மிக மோசமான உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாவதோடு சமூகத்தால் புறக்கணிக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது.

குற்றம் செய்தவர்கள் மனம் வருந்துவதற்கும் திருந்துவதற்குமான வாய்ப்பை தூக்குத் தண்டனை இல்லாமல் செய்வதோடு இது மனித மாண்பைக் கடுமையாக எல்லை மீறும் செயலாக உள்ளது என்று கத்தோலிக்க திரு அவையின் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தி உள்ளார்.

எனவே மனித உயிர்களின் மாண்பு போற்றப்படவேண்டும். மதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்ற இந்தக்கால சூழமைவில் தூக்குத் தண்டனையை இலங்கையில் மீளவும் நடைமுறைப்படுத்துவது பன்னாட்டு ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும். தூக்குத் தண்டனைக்குப் பதிலாக வாழ்வதற்கான உரிமையோடு கூடிய தண்டனையை வழங்குவதோடு அவர்கள் திருந்தி நல்ல மனிதர்களாக வாழ்வதற்கான மறுவாழ்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே மிகச் சிறந்த நல்ல வழியாகும்.

நாட்டில் மீண்டும் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது சமாதானத்தையும் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும் என்றும் ஆசிக்கின்ற மக்களையும் வேதனைப்படுத்துகிறது. இதை வன்மையாகக் கண்டிப்பதோடு இந்தத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

நாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு அந்தத் தண்டனையை நடைமுறைப்படுத்தப்போகிறேன் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கூறிவருகின்றர். அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. (க-135)

மலையக இளைஞர்களை தூண்டிவிட வேண்டாம்

வடிவேல் சுரேஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 4

பெருந்தோட்டங்களில் எங்கெங்கு தரிசு நிலங்கள் இருக்கின்றதோ அந்த தரிசு நிலங்களை இளைஞர்களின் சுயதொழில் முயற்சிக்குப் பயன்படுத்த முடியும்.

வேலை அற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பும் இந்த நாட்டில் அபிவிருத்தியும் ஏற்படும். தேவையில்லாமல் மலையக இளைஞர்களை தூண்டிவிட்டு கூத்துப் பார்க்காதீர்கள். மலைய இளைஞர்கள் இந்த நாட்டில் ஆயுதம் ஏந்தவுமில்லை, தனிநாடுகோரவும்இல்லை. சுதந்திரமாக வாழவே நினைக்கின்றார்கள். இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில்இராஜாங்கஅமைச்சரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொது செயலருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்ட தொழிற்சாலைகள் எங்காவது மூடப்பட்டு இருந்தால் அதனை முறையாகப் பயன்படுத்த வேண்டும். பெருந்தோட்ட நிறுவனங்கள் முறையாகச் செய்யாவிட்டால் தோட்டக் காணிகளை தொழிலாளர்கள் பயன்படுத்தலாம். அதேபோல் பெருந்தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களில் இளைஞர்கள் விவசாயம் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேன்மை அடைய செய்துக் கொள்ள முடியும். இதனைச் செய்வதால் இவர்களில் எவரும் தவறு செய்தவர்கள் கிடையாது. ஆனால் தோட்ட நிர்வாகங்கள் தாங்களும் பயன்படுத்தவது இல்லை, பயன்படுத்தக் கூடிய தொழிலாளர்களுக்கோ அல்லது வேலையற்ற தோட்ட இளைஞர்களுக்கோ வழங்குவதும் இல்லை. தங்களுக்குத் தேவையான தனியாருக்கு வழங்குகின்றனர். இதை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தோட்டங்களை முறையாக நிர்வாகங்கள் நடத்தாது கைவிட்டால் அது தோட்டத்தில் உள்ளவர்களுக்கே சொந்தமானது.

இந்தச் செயற்பாடுகளை மலையதோட்டப்புறங்களில் முன்னெடுக்கும் பொழுது சில தோட்ட நிர்வாகங்கள் பிழையாக சித்தரித்து பொலிஸாரினால் கைதும் விசாரணைகளும் நடக்கின்றன. அதற்குப்பொலிஸாரும் உதவி செய்கின்றனர். இது கோப்பிக் காலம் அல்ல. அப்போது பயமுறுத்தியது போல் பயமுறுத்துவதற்கு, தரிசுக் காணிகளை பாவிப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவோ பொலிஸாரினால் கைது செய்யவோ முடியாது. எங்கள் மலையக இளைஞர்களுக்கும் சுதந்திரம் இருக்கின்றது. மலையக இளைஞர்கள் இந்த நாட்டில் ஆயுதம் ஏந்தவில்லை, தனிநாடு கோரவும் இல்லை. சுதந்திரமாக வாழ நினைக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பங்களில் தோட்டஅதிகாரியும்பொலிஸாரும் பொறுப்பாக நடந்துக் கொள்ள வேண்டும். மலையக இளைஞர்களைத் தூண்டிவிட்டு கூத்துப் பார்க்காதீர்கள் - என்றார். (ஒ.5)

தூக்குத் தண்டனைக்கு எதிரான மனு நாளை வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 4

போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராக தூக்குத் தண்டனையை நிறைவேற்ற அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள தீர்மானத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு கோரி மேன்முறையீட்டு நீதி மன்றில் தாக்கல் செய்த மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் யசந்தா கோட்டேகொட உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் நேற்றுப் புதன்கிழமை இந்த மனுவை பரிசீலித்தது. இதன்பின்னர் இந்த மனு மீதான விசாரணை நாளைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மலிந்த சனவிரத்ன தாக்கல் செய்த மேற்படி மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் யசந்த கோத்தாகொட தலைமையிலான ஐந்து நீதியரசர்க ளைக் கொண்டகுழு நேற்றுமுன்தினம் விசார ணைக்கு எடுத்துக் கொண்டது. இதன் போது, சட்டமா அதிபர் தரப்பில்முன்னிலையான மூத்த பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நளின் புள்ளே, தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாள் மற்றும்நேரத்தை அரசதலைவரே முடிவு செய்ய வேண்டும்.

மனுதாரரின் நடவடிக்கைகள் அரச தலைவருக்கு எதிராக உள்ளன. இதனை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை, என்று அடிப்படை எதிர்ப்பு வாதத்தை முன்வைத்திருந்தார். இதனையடுத்து வழக்கு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

(ஒ.5.22)

போராட்டத்தை கொச்சைப்படுத்தியுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன

சீறுகிறார் கோடீஸ்வரன்

கொழும்பு, ஜூலை 4

தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடிய விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் போராட்டத்தை அரச தலைவர் மைத்திரிபால கொச்சைப்படுத்தியுள்ளார்.

அவரது இந்தச் செயற்பாடு தமிழ் மக்களை வெகுவாக பாதித்துள்ளதுடன் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் விற்றுப் போராட்டம் நடத்தும் அளவுக்கு தலைவர் பிரபாகரன் இருக்கவில்லை. ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மற்றும் நிதிப்பங்களிப்புடனும் புலம்பெயர் அமைப்புக்களின் உதவியுடனுமே அவர் போராட்டத்தை முன்னெடுத்தார். பெண்கள் தமது தாலியினை கூட வழங்கி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்கள்.

தமிழ் மக்களால் தியாகியாகவும் கடவுளாகவும் பார்க்கப்பட்ட அவரது போராட்டத்தையும் போதைப்பொருளையும் ஒப்பிட்டு அரச தலைவர் மைத்திரிபால கொச்சைப்படுத்தியதானது தமிழ் மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ஒ.5)

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டோர் விவரத்தைக் கோருகிறது ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 4

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 20 பேரின் முழு விவரத்தையும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு கோரியுள்ளது.

உடனடி ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் இந்த நாட்டு மக்களைக் கருத்திற்கொண்டு விரைவான பதிலை எதிர்பார்த்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினாலும், ஊடகவியலாளர் மலிந்த சனவிரத்னவினாலும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல் கோரல் விண்ணப்பத்தை அடுத்தே ஆணைக்குழுவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சில மாதங்களுக்கு முன்னர் போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தூக்குத் தண்டனைக் கைதிகள் 20 பேரின் விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

அவர்கள் குற்றவாளியாக இனங்காணப்பட்ட திகதி மற்றும் வழக்கு இலக்கம் என்பவற்றை வழங்குமாறு சிறைச்சாலைகள்திணைக்களத்துக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டிருக்கிறது.

எனினும் சில கைதிகள் தமது விவரங்கள் வெளியிடப்படுவதை விரும்ப மாட்டார்கள் என்பதால், அவர்களிடம் அனுமதிபெற்றபின்னரே அவற்றை வெளியிட முடியும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஒ.5)

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

மைத்திரியின் முடிவை எதிர்த்து நாடாளுமன்றில் தீர்மானம் வரும்

ஆட்சித் தரப்பு கங்கணம்

கொழும்பு, ஜூலை 4

தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிரான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரச தரப்பு முடிவு செய்துள்ளதாக ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனிநபர் தீர்மானமாக இது சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூக்குத் தண்டனைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதால், தனிநபர் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் குற்றவாளிகள் நால்வருக்குதூக்குத்தண்டனையை நிறைவேற்ற அரச தலைவர் திட்டமிட்டுள்ள நிலையில், ரணில் தலைமையிலான அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையிலேயே, நாடாளுமன்றத்திலும் அரச தரப்பு தீர்மானத்தைக் கொண்டு வர திட்டமிட்டுள்ளது.

(ஒ.5)

இராணுவத்தினரிடம் புலிகள் சரணடையவில்லையெனில்

இறுதிப் போரில் வெள்ளைக்கொடியுடன் வந்தோருக்கு என்னதான் நடந்துள்ளது?

சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படாது பொறுப்புக்கூறுங்கள் என்கிறார் சிவமோகன் எம்.பி.

மன்னார், ஜூலை 4

விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை எனில் வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களுக்கு என்ன நடந்தது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் கேள்வியெழுப்பியுள்ளார்.

சிறுபிள்ளைத்தனமாக ஒருவரை மாற்றி ஒருவர் மீது குற்றஞ்சாட்டாமல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக் கூற முன்வாருங்கள் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்தாவது:

புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை என்றும் அவர்கள் அரசிடமே சரணடைந்தார்கள் என்றும் கையெழுத்திட்டு தகவல் அறியும் சட்டத்தில் கேட்ட கேள்விக்கு தகவல் தரும் அதிகாரியான பிரிகேடியர் ஏ.எம்.எஸ்.பி. அத்தபத்து கூறியுள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் புலிகள் இராணுவத்திடம் சரணடையவில்லை என்றால் வெள்ளைக் கொடியுடன் உங்களிடம் வந்தவர்கள் யார்? வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் பற்றி கேள்விகளுக்குச் சரியான பதில் வழங்கியுள்ளீர்களா?

பன்னாடுகளிடம் சகல ஆதாரங்களும் உள்ளன. ஐ.நா. சபையின் தருஸ்மன் அறிக்கையில் தெளிவாகப் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சரணடைந்த தமிழ் மக்கள், விடுதலைப்புலிகளின் போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன என்று பன்னாடுகள் கூறுகின்றன.

நீங்கள் நியாயமானவர்களாக இருந்தால் பன்னாட்டு விசாரனைக்கு நீங்கள் உடன்படுவீர்களா? உங்களிடம்யாருமேசரணடையவில்லைஅரசிடம்தான் சரணடைந்தார்கள் என்றால் நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? பங்குத் தந்தையுடன் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கொண்டு செல்லப்பட்டனர், பின்னர் காணாமல் போயினர் என்று இன்றும் பல குடும்பப் பெண்கள் கண்ணீருடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

போர்க் குற்ற விசாரணையின் முக்கியசாட்சியாகஉள்ளஅனந்திசசிதரன் தனது கனவருக்கு நேர்ந்த கதியை ஐ.நா. சபை வரை சென்று கூறியுள்ளார். இதைவிட வேறு என்ன ஆதாரம் தேவை?- என்றார். (த-213)

தொடருந்துகளில் யாசகம் கேட்பவர் 3 வீடுகளுக்குச் சொந்தக்காரி

கொழும்பு, ஜூலை 4

தொடருந்துகளில் யாசகம் பெற்று வந்த 65 வயதுடைய கண் பார்வையற்ற வயோதிபப் பெண்ணுக்குச் சொந்தமாக 3 வீடுகள் இருப்பதும், அவரது வங்கிக் கணக்கில் 5 லட்சம் ரூபா பணமும் வைத்திருந்தமையையடுத்து அந்தப் பெண் தொடருந்து நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பகா நகரில் உள்ள தொடருந்து நிலையங்களில் கடந்த 25 ஆண்டுகளாக யாசகம் பெற்று வந்த பெண் அதன் மூலம் கிடைத்த பணத்தில் 3 வீடுகளையும் கட்டியதாகத் தெரிவித்துள்ளார். அவற்றில் 2 வீடுகளை அவரது மகள்களுக்கு வரதட்சணையாக வழங்கியுள்ளதாகவும் மூன்றாவது வீட்டை வாடகைக்கு விட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விதவைப் பெண்ணான அவர் கம்பகா மற்றும் கோட்டை தொடருந்து நிலையங்களுக்கிடையில் யாசகம் பெற்று வருவதாகவும் நாள் ஒன்றுக்கு சுமார் 4 ஆயிரம் ரூபாவும், மாதத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபா பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் யாசகம் பெறுவது தனது மகள்களுக்கும் தெரியும் என்றும், அவரது மருமகன்கள் நல்ல வேலைகளில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமையன்று அவரைக் கைது செய்த நிலையில் அவரது மகள்களில் ஒருவர் வந்து அவரை பார்த்துச் சென்றதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ஒ.5)

ஸஹ்ரானின் தங்கை மன்றில் முன்னிலையானார்

கொழும்பு, ஜூலை 4

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று பொலிஸாரால் கூறப்படும் ஸஹ்ரானின் தங்கை உள்ளிட்ட உறவினர்கள் மூவர் கல்முனை நீதிவான் நீதி மன்றுக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

சாய்ந்தமருதுவில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குத லில் உயிரிழந்தவர்களின் தகவல்களை உறுதிப்படுத்தி இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கென விசாரணைக்கா கவே இவர்கள் அழைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸஹ்ரானின் தங்கையான நியாஸ் மதனியா மற்றும் அவரது கணவர் எம்.எம்.நியாஸ் சாய்ந்தமருது தாக்குதலில் உயிரிழந்த வார உரை கல் ஊடகவியலாளர் என்று கூறப்படும் நியாஸின் மனைவி அஸ்மியா உள்ளிட்டோர் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் குற்றப்புல னாய்வு வாகனம் மற்றும் சிறைச்சாலை பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களிடம் நீதிவானின் அறையில் வைத்து விசாரணை முன்னெடுக்கப்பட் டது.

(ஒ.5)

வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்களை வரவேற்கச் சென்றவர்கள் விபத்தில் காயம்

கொழும்பு, ஜூலை 4

ஆனமடுவ சிலாபம் வீதியின் பள்ளம பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. வான் ஒன்றும் லொறியொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நடைபெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த ஐவரும் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடாவிலிருந்து வருகைத் தந்த உறவினர்களை வரவேற்பதற்காக, இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை நோக்கிப் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஒ.5)

வரி விதிப்புக்கு எதிராக அரச வங்கி ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 4

அரசு விதித்துள்ள வரி விதிப்பை நீக்குமாறு கோரி நாடளாவிய ரீதியில் அரச வங்கி ஊழியர்கள் கவன வீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், வவுனியா,மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்ட நேற்று முன்னெடுக்கப்பட்டது.

"ஊழியர் உணவுக்கு தேனீருக்கு வரி வேண்டாம், இல்லாமல் ஆக்கப்பட்ட ஓய்வூதியத்தை மீள் வழங்கு, வங்கி ஊழியர்களின் உரிமையை உறுதி செய், ஓய்வூதியக் கொடுப்பனவு வழுக்களைத் திருத்துக, பெற்றுக்கொள்ளத்தக்க ஒரு ஓய்வூதியத்தை தருக" போன்ற தமிழ் சிங்கள வசனங்களைத்தாங்கிய பதாகைகளுடன் வங்கி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைக்கு முன்பாக உள்ள இலங்கை வங்கிகிளை வாசலில் நேற்று மதியம் 12.30 மணிதொடக்கம்1.30 மணி வரை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா

வவுனியா தொடருந்து வீதியிலுள்ள இலங்கை வங்கியிலிருந்து மதியம் 12 மணியளலி ஆரம்பித்த போராட்டம் மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக கண்டி வீதி வழியாககார்கில்பூட்சிட்டிக்கு முன்பாக சென்று ஒரு மணியளவில் நிறைவடைந்தது.

மட்டக்களப்பு

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மணிக்கூட்டு கோபுரம் வரை சென்றடைந்தது.

குறித்த கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு இப்பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்றும் இல்லையேல் அடுத்த கட்ட போராட்டங்களைமேற்கொள்ளப்போவதாகவும் ஆர்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-ரி)

திருமலை...

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இரவு 7 மணியளவில் திருகோணமலை நிலாவெளிக் கடற்கரைப் பிரதேசத்தில் காந்தி சிலை அருகில் அரச படையினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஜி.சீ.ஈ. உயர்த ரப் பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த 5 மாணவர்கள் உயிரிழந்தனர். அத்துடன், 2 மாணவர்கள் காயமடைந்தனர்.

மனோகரன் ரஜீகர், யோகராஜா ஹேமச்சந் திரா, லோகிதராஜா ரோகன், தங்கத்துரை சிவானந்தா மற்றும் சண்முகராஜா கஜேந்தி ரன் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரி ழந்தனர். படுகொலை செய்யப்பட்ட மாண வர்களின் பெற்றோர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர்கள் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாட்டில் புகலிடம் கோரினர்.

இந்தக் படுகொலையை அரசும், இராணுவத் தினரும், பொலிஸாரும் மறுத்து வந்ததுடன், பின்னர் உயிரிழந்த அனைவரும் விடுத லைப்புலி களின் உறுப்பினர்கள் எனவும், இவர்கள் இராணுவத்தினரைத் தாக்க முற்பட் டவேளை கைக்குண்டு வெடித்தே உயிரிழந் தனர் எனவும் தெரிவித்தனர்.

இருப்பினும், 5 மாணவர்களும் அரச படை யினரால் கிட்ட நின்று துப்பாக்கி யால் சுட்டுக் கொல்லப்பட்டமை சட்ட மருத்துவ பரிசோத னையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இதனை ஒளிப்பட ஆதாரத்துடன் செய்தியாக வெளியிட்ட 'உதயன்' 'சுடர் ஒளி' திருகோண மலை செய்தியாளர் எஸ். சுகிர்தராஜனும் சில நாளகளின் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார். மாணவர்களின் படுகொலை தொடர்பில் சந் தேகத்தின் அடிப்படையில் 12 சிறப்பு அதிரடிப் படையினரும், உதவிப் பொலிஸ் அத்தியட்ச கர் ஒருவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 2013ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். எனி னும், கைதுசெய்யப்பட்ட அனைவரும் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

13 அரச படையினருக்கும் எதிராக திருகோ ணமலை நீதிவான் நீதிமன்றால் ஆரம்ப விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டன. 36 பேர் சாட்சிகளாகப் பெயரிடப்பட்டனர். அவர் களில் முக்கிய சாட்சிகள் 8 பேர் மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்கவில்லை. அவர்களில் இருவர் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தவர்க ளாவர்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட மாண வர்களின் பெற்றோர், பன்னாட்டு நீதி கோரி நீண்ட சட்டப் போராட்டம் நடத்தினர். ரஜீகரின் தந்தை மனோகரன் ஜ.நா. மனித உரிமை கள் சபையிலும் சாட்சியமளித்திருந்தார்.

இலங்கையின் நீதிப்பொறிமுறை குறித்து பன்னாட்டு அளவில் கவனத்தை ஈர்த்த விவ காரமாக இந்த வழக்கு விளங்கியது. பன் னாட்டு அமைப்புகள் இந்தப் படுகொலை யைப் பகிரங்கமாகக் கண்டித்திருந்தன.

இந்தநிலையில், திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எம்.மொகமெட் ஹம்சா முன் னிலையில் நேற்று இந்த வழக்கு கட்டளைக் காக வந்தது.

'வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 13 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் மன்று திருப்தியடையும் வகையில் சான்றாதாரங் கள் முன்வைக்கப்படவில்லை. அதனால் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 153 மற்றும் 154ஆம் பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சான்றாதாரங்களு டன் முன்வைக்கப்படவில்லை. அதனால் 13 எதிரிகளும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்படுகின்றனர்' என்று நீதிவான் எம்.எம்.மொகமெட் ஹம்சா கட் டளை வழங்கினார்.

இதேவேளை, 13 அரச படையினருக்கும் எதிராக சட்டமா அதிபர் தனக்குள்ள அதிகாரத் தின்படி மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை செய்ய சட்ட ஏற்பாடுகள் உண்டு. எனினும், அது நடைபெறுமா என்பது கேள்விக்குறி தான். படுகொலையுடன் சம்பந்தப்பட்ட அரச படையினர் 13 பேரும் நிரபராதிகள் என விடு விக்கப்பட்டமை நீதியை எதிர்பார்த்த மாண வர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுக ளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. அவர் கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-22)

ஸ்கந்தா...

எது. இதற்கான அடிக்கல் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகத்தில் இன்று காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறவுள்ளது. நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நடவுள்ளார்.

தொடர்ந்து அளவெட்டி அருணோதயக் கல் லூரியில் கட்டடமொன்றையும் இன்று திறந்து வைக்கவுள்ளார். அருணோதயக் கல்லூரி யின் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)

பலாலியிலிருந்து...

ஆரம்பமாகவுள்ளதாகத் தொடர்புடைய வட் டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் மூன்றாவது பன்னாட்டு வானூர்தி நிலையமாக, பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் நாளை வெள்ளிக்கிழமை அமைச்சர் அர் ஜுன ரணதுங்க தலைமையில் ஆரம்பிக்கப் படவுள்ளன. 19.5 பில்லியன் ரூபா செலவில் பிராந்திய வானூர்தி சேவைகளை நடத்தக் கூடிய வகையில் பலாலி வானூர்தி நிலையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களாக பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

ஓடுபாதை விரிவாக்கம் மற்றும் தொடர்பு டைய வசதிகளை மேற்கொள்வது முதலாவது கட்டப் பணிகளாக முன்னெடுக்கப்படும். வானூர்தி நிலையம் கணிசமான வானூர்திப் போக்குவரத்தை ஈர்த்தவுடன், இரண்டாவது கட்டமாக, நிரந்தரமான முனைய கட்டடங்கள் கட்டப்படும்.

பலாலி வானூர்தி நிலையத்தின் ஓடுபாதை, 3 ஆயிரத்து 500 மீற்றர் நீளம் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டு, ஏ320, ஏ321 போன்ற பெரிய பயணிகள் வானூர்திகள் தரையிறங் கக் கூடிய வசதிகள் செய்யப்படவுள்ளன.

ஓராண்டு பேச்சு

பலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்தும் பேச்சு கடந்த ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இலங் கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இரா ணுவத் தளபதி உள்ளிட்டோர் இந்தச் சந்திப் பில் பங்கேற்றிருந்தனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் இந்தி யாவுக்கான வானூர்திச் சேவையை உடன டியாக ஆரம்பிப்பது என்று இந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டிருந்தது. நீண்ட இழுபறி யின் பின்னர், தற்போது வானூர்திச் சேவையை ஆரம்பிப்பதற்குரிய அபிவிருத் திப் பணிகள் நாளை ஆரம்பித்து வைக்கப்ப டவுள்ளன. (ம-ஒ,5)

பொங்கல்...

நீரவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் பொங் கல் நிகழ்வு நாளைமறுதினம் கோலாகலமாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனை முன்னிட்டு கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பண் டம் எடுத்து வரப்பட்டு 108 பானைகளில் பொங்கல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதைய டுத்தே அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த குறித்த விகாரையில் பிரித் ஓதும் வழிபாடு களை மேற்கொள்ள குறித்த பிக்கு நடவடிக் கைகளை எடுத்துள்ளார். இதற்காக சிங்கள ராவய அமைப்பின் தலைவர்களும் அழைத்து வரப்பட்டுள்ளனர். (ம-ரி3)

தமிழ்க்...

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்குத் தீர் வைப் பெற்றுத் தருவார், அவர் அனைத்தை யும் செய்துமுடிப்பார் என்று அவரை முதல்வ ராகக் கொண்டுவரவில்லை. வடமாகாணத் தில் முதல்வராக வருவதற்கு பலர் தகுதியான வர்களாக இருந்தபோதிலும் அவரைக் கொண்டுவந்தமைக்கு முக்கிய காரணம் ஆயுதப்போராட்டத்துடன் தொடர்பில்லாத ஒருவரை பன்னாட்டுச் சமூகத்தின் முன் கொண்டுவந்து எமது ஜனநாயக வழியை நிரூபிக்க எடுத்த முயற்சியே. ஆக, தமிழ் மக் களின் ஒரு பிம்பமாகவே விக்னேஸ்வரனை முதல்வர் ஆக்கினோம். அவரால் வடக்கில் பாலும் தேனும் ஓடவைக்க இயலாது என்று நன்று தெரியும். ஆனால் அவர் தான் எந்த வழியால் அரசியலுக்கு வந்தாரோ அதை மறந்து தற்போது செயற்படுகின்றார். தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றால் அவர் எம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும். இல்லை யேல் அவரின் பாதை எத்தகையது என்பது அடுத்த தேர்தலுக்குப் பின்னர் அவருக்குத் தெரியவரும் - என்றார். (ம)

வடமாகாண...

தொடர்ந்து இது தொடர்பில் கலந்துரையாடல் கள் இடம்பெறவுள்ளன. மாதாந்தம் இடம்பெ றும் இந்த 'வடமாகாண வட்ட மேசை' கலந் துரையாடலில் ஆர்வமுள்ள எவரும் கலந்து கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ம)

மைத்திரியி...

தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், 14 வருடங்களுக்கு முன்னர் ஹெரோய்ன் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சாவுத் தண்டனை விதிக் கப்பட்ட மிப்தாரின் மனைவி சல்காவுடம் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக் கது. (ம)

சம்பந்தன்....

கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதுபற்றி சிந்திக்க வேண்டி வரும் என்ற சமந்தனின் கூற்று தமிழ் மக்களுக்குப் பாதிப்பையே ஏற்படுத் தும். நாங்கள் ஆயுதம் ஏந்தக் கூடிய ஒரு நிலையில் இல்லை. மூன்று மாதங்களுக்கு தீர்வுகள் கிடைக்காது விடின் ஆயுதம் ஏந்து வோம் எனக் கூறுவதில் எவ்விதமான பின் னணியும் இல்லை. இது பேச்சுக்காக பேசும் பேச்சு போலவே தெரிகிறது.

ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் ஏற்பட்டு முப் பது வருடங்களாக ஆயுதம் ஏந்திய தாக்கம் இப்போதும் எங்களிடம் இருக்கிறது. எனவே இது சம்மந்தமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கூறியிருக்கலாமே தவிர ஆயுதங்கள் எடுப்போம் என்ற பேச்சு, கூற்று மனவருத்ததிற்குரியது என்பது என்னுடைய கருத்து. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் 2016ஆம் ஆண்டில் இவ்வருட இறுதிக்குள் தீர்வு என்று கூறினார். அவ் வாறே 2017ஆம் ஆண்டிலும், 2018ஆம் ஆண்டிலும் கூறினார். இப்பொழுது எங்க ளுக்கு தீர்வு கிடைக்கவில்லை எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுகின்றார். ஆனால் நாங்கள் இதைதான் அப்பொழுது இருந்தே கூறி வந்தோம். அரசு எப்பொழுதும் மனமுவந்து தீர்வினை வழங்காது. அரசுக்கு நெருக்கடிகளை, அழுத்தங்களை கொடுத்தே தீர்வுகளை பெறவேண்டும். அல்லது அவர் கள் தங்களின் சுயநலன் கருதி தீர்வுகளை வழங்கலாம். இதனை விடுத்து அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தீர்வினை தருவார்கள் என்று நம்புவது சிறுபிள்ளைதன மானது.

சம்மந்தனின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு தீர்வுகள் கிடைக்க கூடும் என்று சாத்தியக் கூறுகள் எதுவும் தென்பட வில்லை. சம்மந்தன் நூறு வயது வரை இருந்தால் சிலவேளை அவரது காலத்தில் தீர்வு கிடைக்க கூடும். ரணில் சில வேளைக ளில் இந்த தேர்தல் காலங்களில் அரசியல் காரணங்களுக்காக ஏதேனும் தீர்வுகளை தரலாம் என கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது. அது நடக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் - என்றார். (ம)

கோத்தபாயவை...

காப்புச் செயலர் கோத்தபாயவை நேற்றுச் சந் தித்து நலம் விசாரித்தனர். பிரசன்ன ரண துங்க, தேனுக விதானகமகே, பிரியங்கர ஜய ரத்ன, பிரசன்ன ரணவீர, இந்திக அனுருத்த மற்றும் கெஹெலிய ரம்புக்வெல ஆகிய நாடா ளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு சிங்கப்பூர் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

சண்டிலிப்பாய் பகுதியில் பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் கடையொன்றில் நேற்று இரவு 8.30 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

இந்தத் தாக்குதலில் மூவர் காயம டைந்து தெல்லிப்பழை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-26)

தாயகம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தால் 95 மாணவர்களுக்கு அண்மையில் ஒருதொகுதி உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. 7 மாணவர்களுக்கு ஈருருளிகளும் வழங்கப்பட்டன. (ம)

மகாரஷ்டிராவில் கடும் மழை

பரவலாகப் பலர் சாவு!

புதுடெல்லி,ஜூலை 4

இந்தியாவின் தென் மாநிலமான தமிழகத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்திருக்கின்ற நிலையில், இந்தியாவின் மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவில் கடும் மழை பெய்கிறது. அங்கு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த மழை தொடர்ந்து 5 நாள்களாக இரவு, பகலாகப் பெய்கிறது. 24 மணி நேரத்தில் 375.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அங்கு பதிவாகி உள்ளது. அந்த மாநிலத்தின் மும்பை, தாணே, புனே உள்ளிட்ட பகுதிகளில் இடைவிடாமல் கனமழை பெய்கிறது. இந்த மழை காரணமாக வெவ்வேறு இடங்களில் சுவர் இடிந்து விபத்துக்குள்ளானது உள்ளிட்ட சம்பவங்களால் பலர் சாவடைந்தனர்.

மும்பை வெள்ளத்தில் தத்தளிக்கிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ள நிலையில், புனேயில் இந்த மழையால் அடுக்குமாடிக் குடியிருப்பின் மதிற் சுவர் இடிந்து வீழ்ந்தது. இதனால் 15 பேர் சாவடைந்தனர். மும்பை மலாடு கிழக்குக் குரார் பிம்பிரிபாடா பகுதியில் இருக்கும் மலையடிவாரத்தில் உள்ள குடிசைவாசிகளின் மலைத் தடுப்புச்சுவர் இடிந்து குடிசைகள் மீது விழுந்தது. இதில் வீடுகள் தரைமட்டமாகின. உள்ளே உறங்கிக்கொண்டிருந்த பலர் இடிபாடுகளில் சிக்கிப் புதையுண்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். இடுபாடுகளுக்குள் சிக்கியிருந்த 21 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். 50க்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளானார்கள். மும்பை மலாடு பகுதியில் மகிழுந்து ஒன்று வெள்ளத்தில் மூழ்கியதால் அதற்குள் இருந்த 2 பேர் வெளியே வர முடியாமல் சாவடைந்தார்கள். இந்தச் சம்பவம் அங்கு பெருந்துயரத்தை ஏற்படுத்தியது. தானே மாவட்டம் கல்யாணில் உள்ள தேசிய உருதுப்பாடசாலையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் அங்குள்ள குடிசை வீட்டில் வசித்துவந்த சோகன் காம்ப்ளே (வயது60), கரீனா சந்த் (25), பூசன் சந்த் என்ற 3 வயது சிறுவன் என 3 பேர் உயிரிழந்தனர். இதில் காயம் அடைந்த ஆர்த்தி (வயது 16) என்ற சிறுமி மருத்துவமனையில் சிகிச்சைக் காகசேர்க்கப்பட்டாள். பால்கர் மாவட்டத்தில் ஜானு உம்பர்சாடா (60), கைலாஷ் நாகடே (29) ஆகிய 2 பேர் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுச் சாவடைந்தனர். புனே அம்பேகாவ் பகுதியில் உள்ள சின்ஹாட் என்ற கல்லூரியின் மதிற் சுவர் மழையின் போது இடிந்தது. இதில் அந்த மதில் சுவரை ஒட்டி குடிசை அமைத்து தங்கியிருந்த 6 தொழிலாளர்கள் சாவடைந்தனர். 2 பேர் காயம் அடைந்தனர். இவ்வாறாக இந்தியாவின் மகாராஷ்டிராவில் பெய்கின்ற கடும் மழையால் பரவலாகச் சாவுகள் சம்பவித்துள்ளன. இவை இன்னமும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.



லிபியாவில் வான் தாக்குதல் 40 பேர் சாவு

திரிபோலி,ஜூன் 4

லிபியாவில் அகதிகள் இருப்பிடத்தில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 40 பேர் சாவடைந்தனர். ஆபிரிக்காவிலிருந்து புலம்பெயர்ந்து வந்து லிபியத் தலைநகர் திரிபோலியில் தங்கியுள்ள அகதிகள் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலிலேயே இந்தச் சாவுகள் சம்பவித்தன.

அத்தோடு இதில் 70க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் சாவுகள் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. லிபியாவில் ஆயுதமேந்திய இரண்டு குழுக்கள் போட்டி நாடாளுமன்றங்களை ஏற்படுத்தி இரண்டு பிரிவுகளாக அரசாட்சி செய்து வருவதும், கடாபியின் மறைவுக்குப் பிறகு லிபியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு காலூன்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

முகநூல் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட 'நச்சு' பொதி

வோஷிங்டன், ஜூலை 4

அமெரிக்காவிலுள்ள முகநூல் அலுவலகம் ஒன்றுக்கு வந்த பொதி ஒன்றை ஊழியர்கள் திறந்து பார்த்தபோது, அதில் நச்சு இரசாயனம் இருந்துள்ளது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் மென்லோ பார்க் என்ற இடத்தில் அமைந்துள்ள முகநூல் நிறுவனத் தலைமை அலுவலகத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

இதையடுத்து, அங்கு பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அங்கு விரைந்த பொலிஸார் அந்தப் பொதியைக் கைப்பற்றி ஆய்வுக்கு அனுப்பினர்.



அகதிகள் விவகாரம் ட்ரம்ப்பைச் சாடிக் கார்ட்டூன்

ஒட்டோவா, ஜூலை 4

எல்சல்வடார் நாட்டைச் சேர்ந்த ஆஸ்கர் ஆல்பெர்டோ மார்ட்டினஸ் மற்றும் அவரது 2 வயது மகள் ஆங்கி வலேரியா ஆகியோர் அமெரிக்காவில் குடியேறுவதற்கு முற்பட்டபோது ஆற்றில் மூழ்கி இறந்தனர். அவர்களின் சடலம் கரை ஒதுங்கிய ஒளிப்படம் வெளியாகி உலகை உலுக்கியது. இந்த ஒளிப்படம் அமெரிக்காவில் தஞ்சமடைவதற்காக அகதிகள் எவ்வளவு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை உணர்த்துவதாக அமைந்தது. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கெடுபிடிகளால்தான் இந்தத் தந்தையும், மகளும் இறந்ததாக சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்தனர். இந்த நிலையில் கனடாவைச் சேர்ந்த பிரபல கார்ட்டூன் ஓவியரான மைக்கல் டி ஆட்டர், இந்த விடயம் தொடர்பில் ட்ரம்பைச் சாடிக் கேலிச்சித்திரம் ஒன்றை வரைந்தார்.

தந்தை - மகள் இறந்து கிடக்கின்ற ஆற்றுக்கு அண்மையாக விளையாட்டு மைதானத்தில் நின்றபடி, ட்ரம்ப் ஆற்றில் கரை ஒதுங்கிய தந்தை மகளின் உடலை பார்த்து, "நான் விளையாடுவதைப் பார்த்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா?" என்று கேட்பதுபோல் அந்தக் கேலிச்சித்திரம் வரையப்பட்டுள்ளது.

இது சமூக வலைத்தளங்களில் அதிகம் பரவிப் பேசுபொருளானது.

ஆசியாவின் மிக பெரிய மதுக்கடை

இந்தியாவில் காந்தி சிலைக்கு அருகே!

பெங்களூரு, ஜூலை 4

ஆசியாவின் மிகப் பெரிய மதுபானக் கடை இந்தியாவின் பெங்களூருவில் காந்தி சிலை ஒன்றுக்கு அருகே அமையஉள்ளது. இதற்குக் கடும் எதிர்ப்புப் பெருகி வருகிறது.

மதுப் பழக்கத்தைக் கடுமையாக எதிர்த்தவர் இந்தியாவின் தேசபிதா என்று துதிக்கப்படுகின்ற மகாத்மா காந்தி. அவரது பிறந்த நாளில் மதுக்கடைகளை மூடவேண்டும் என இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையிலேயே கர்நாடக மாநிலம் பெங்களூருவில் காந்தி சிலை ஒன்றுக்கு அருகே ஆசியாவிலேயே மிகப் பெரிய மதுபானக் கடை அமைய உள்ளது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். பெங்களூரு சின்னச்சாமி கிரிக்கெட் மைதானத்துக்கு அருகிலுள்ள காந்தி சிலைக்கு அருகிலேயே இந்த மதுபானக் கடை அமைய உள்ளது. இதையறிந்த சமூக ஆர்வலர்கள் உட்பட்ட பலர் இந்த மதுபானக் கடைக்கு அனுமதி கொடுக்கக் கூடாது எனக் கோரிக்கை விடுத்ததுடன், தங்களது எதிர்ப்புகளையும் தெரிவித்து வருகின்றனர்.

சவூதியின் வானூர்தி நிலையம் மீது மீண்டும் தாக்குதல் 9 பேர் காயம்

ரியாத்,ஜூலை 4

சவூதியின் அபா வானூர்தி நிலையம் மீது நடந்த தாக்குதலில் 9 பேர் காயமடைந்தனர். கடந்த மாத ஆரம்பத்தில் அபா வானூர்தி நிலையம் மீது ஹவுத்திப் போராளிகள் தாக்குதல் நடத்திய பிறகு தற்போது மீண்டும் அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தாக்குதலுக்கு இதுவரை ஹவுத்திப் போராளிகள் பொறுப்பேற்கவில்லை.



இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது. தண்ணீருக்காக அலையும் மக்கள் அங்கு பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். இந்த நிலையில் தமிழகத்தின் தலைநகரான சென்னையை அண்மித்த புறநகர்ப் பகுதியில் காய்ந்த ஏரியின் மரத்தின் கீழ் மந்தை மேய்க்கும் வயோதிபர் ஒருவர் ஓய்வெடுக்கும் காட்சி இது. தகிக்கும் வெயில் காரணமாக இலைகளை உதிர்த்துள்ள மரத்தைத் துணிகளால் நிரப்பி நிழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானில் கன மழை

150 பேர் சாவு!

டோக்கியோ, ஜூலை 4

ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்கிறது.

இதனால் அங்கு 150 பேர் சாவடைந்தனர். ஜப்பானின் கியூ தீவில் கனமழை நீடிக்கும் என்றும், மழை காரணமாகப் பல்வேறு இடங்களில் மண் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், கியூத் தீவில் உள்ள ககோஷிமா நகரில் இடைவிடாத கன மழை கொட்டித் தீர்க்கிறது. ஒரு மணித்தியாலத்தில் மட்டும் 40 மில்லி மீற்றர் மழை அங்கு பெய்துள்ளது. இதனால் அந்த நகர் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது.

இதையடுத்து அந்த நகரில் உள்ள 6 லட்சம் மக்களை வெளியேற்றிப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கும்படி அந்த நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

நான் காங்கிரஸ் தலைவர் இல்லை

ராகுல் காந்தி தெரிவிப்பு

புதுடெல்லி, ஜூலை 4

நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பல்வேறு மாநிலக் கட்சித் தலைவர்களும், நிர்வாகிகளும் தங்கள் பதவியைத் துறந்து வருகின்றனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தியும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்றுத் தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாகத் தகவல் வெளியானது. அதன் பின்னர் நடத்தப்பட்ட காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் ராகுல் மீண்டும் தலைவராகத் தொடர முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து ராகுல் காந்தி பதவி துறப்பதான முடிவில் உறுதியாக இருக்கிறார் எனச் செய்தி வெளியானது. ராகுல் இப்படி முடிவெடுத்திருந்தால், உடனடியாக அதைத் திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தின் வாசலில் அந்தக் கட்சித் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ராகுல் காந்தி இது குறித்துக் கூறுகையில், "நான் ஏற்கனவே கட்சி தலைமையிடம் எனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்துவிட்டேன். நான் காங்கிரஸ் தலைவர் இல்லை. உடனடியாகப் புதிய தலைவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்" என்றார். இந்தச் செய்தி காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சைபீரியாவில் வெள்ளப்பெருக்கு

18 பேர் சாவு

மொஸ்கோ, ஜூலை 4

ரஷ்யாவின் சைபிரியாமாகாணத்துக்குட்பட்ட தென்கிழக்குப் பகுதிகளில் 4 நாள்களாகத் தொடர்ந்து பெய்த கடும்மழையால் அங்குள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது. இர்குட்ஸ்க் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 18 பேர் சாவடைந்தனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 20பேர் காணாமல் போயினர்.

அவர்களைத் தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதிக்கு அருகாமையில் உள்ள டுலுன்ஸ்கி, சுன்ஸ்கி, நிஸ்நியூடின்ஸ்கி, டைஷெட்ஸ்கி, ஜிமின்ஸ்கி, குய்டுன்ஸ்கி ஆகிய மாவட்டங்களில் அவசரகால நிலை அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த மழை, வெள்ளம் சார்ந்த இடரால் பாதிக்கப்பட்டு, 38 குழந்தைகள் உட்பட 200 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இன்றைய நாள்

மேடம்: பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். நல்லோரின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு பெறுவர்.

இடபம்: கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். விடாமுயற்சியால் நிலுவைப் பணம் வசூலாகும். அரசு வகையில் நன்மை எதிர்பார்க்கலாம்.

மிதுனம்: நண்பரிடம் மனம் விட்டு பேசுவீர்கள். தொழிலில் நிர்ணயித்த வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உபரி வருமானம் வந்து சேரும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் வளரும்.

கடகம்: சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில கூடுதல் முயற்சி தேவைப்படும். வருமானத்தை விட செலவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

சிம்மம்: பேச்சில் வசீகரத் தன்மை வெளிப்படும். புதியவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும்.

கன்னி: பலரும் அன்பு பாராட்டுகிற நிலைஏற்படும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் உயரும். சமூகத்தில் கூடுதல் கவுரவம் பெறுவீர்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

துலாம்: உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில் வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். நிர்பந்தத்தின் பேரில் கடன் வாங்க வேண்டாம். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

விருச்சிகம்: வீண்பேச்சை குறைப்பது நல்லது. .தொழில் வியாபாரத்தில் கூடுதல் உழைப்பும், விடாமுயற்சியும் தேவைப்படும். பணவரவு சுமாராக இருக்கும்.

தனுசு: லட்சியத்தை நோக்கி முன்னேறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிநிலைதிருப்திகரமாக இருக்கும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

மகரம்: திகைப்பு தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் சேமிப்பாக மாறும்.

கும்பம்: மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

மீனம்: செயல் நிறைவேற விடாமுயற்சி அவசியம். தொழில் வியாபாரத்தில் தடங்கல் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். முக்கிய தேவைக்கு கொஞ்சம் கடன் வாங்குவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும்.

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள இன்று வியாழக்கிழமை திருக்குமரன் விளையாட்டு கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
இந்தத் தொடரில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணாஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூலை 4
கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அம்பிகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



இன்னிங்ஸ் வெற்றி பெற்றது ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

யாழ்ப்பாணம்.ஜூலை 4
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3இக்கான கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. தனது முதலாவது இன்னிங்ஸ்க்காத் துடுப்பெடுத்தா டிய சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணி 24 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துவாரகன் 9 ஓட்டங்களையும், துவாஸ்கர் 6 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் கௌரிசங்கர் 5 இலக்குகளையும்,.கேதுசன் 4 இலக்குகளையும் சாய்த்தனர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 37.4 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. இதில் அணி சார்பில் சீராளான் 101 ஓட்டங்களையும், கௌரிசங்கர் 39 ஓட்டங்களையும், லிதூர்சன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தமிழ்பிரியன், யோகசாளன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 38 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. கரிகரன் 26 ஓட்டங்களையும், துவாஸ்கர் 21 ஓட்டங்கக்களையும், துவாரகன் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கௌரிசங்கர் 5 இலக்குகளையும், தனுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

மோகனதாஸ், வளர்மதி அணிகள் வாகை

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியான கரப்பந்தாட்டத் தொடரில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி,மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கச்சாய் வெலிக்கிங்ஸ் விளையாாட்டுக் கழக அணி மோதியது. இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.இரண்டாவது ஆட்டத்தில்,கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்த மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (23)

யூனியனை வீழ்த்தி கலைவாணி வெற்றி

யாழ்ப்பாணம்.ஜூலை 4
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில்நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான இரண்டாம் சுற்று கால்பந்தாட்ட தொடரில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில்ஆனைக்கோட்டையூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறைகலைவாணிவிளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கால்பந்தாட்டத் தொடர் இறுதியாட்டம் நாளை

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக்கழகத்தின், 50ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, அரச திணைக்களங்களுக்கு இடையில் இடம்பெற்ற கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் மற்றும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் நாளை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் மாலை இடம் பெறும் இறுதியாட்டத்தில் யாழ். போதான வைத்தியசாலை அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண ஆசிரியர் அணியை எதிர்த்து வடமராட்சி ஆசிரியர் அணி மோதவுள்ளது. (23)

இலங்கைபோக்குவரத்து சபையின் வடபிராந்திய அணி

யாழ். போதான வைத்தியசாலை அணி

சங்கானை பிரதேச செலக அணி

யாழ். தபாலக அணி

துடுப்பாட்டத் தொடர் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 4
இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக்கழகத்தின், 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அரச திணைக்களங்களுக்கு இடையில் இடம்பெற்ற துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் மற்றும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் நாளை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் காலை இடம்பெறும் இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.தபாலக விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தென்மாரட்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.போதான வைத்தியசாலை அணி மோதவுள்ளது. (23)

கால் பந்தாட்ட பயிற்சி முகாம்

தமிழ் வீரர் உள்ளடக்கம்

ஸ்பெயின் நாட்டில் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை கால் பந்தாட்ட பயிற்சி முகாம் நடைபெற வுள்ளது.

இதில் 12 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட வீரர்களுக்கான விசேட பயிற்சி முகாமில் பங்குபற்றுவதற்காக இலங்கை சார்பாக 6 வீரர்கள் ஜூலை மாதம் 30 ஆம் திகதி ஸ்பெயின் நாட்டுக்குபயணமாகவுள்ளனர். இதில் தமிழ் மாணவனான இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த பாக்கியநாதர்டேவிட்டாலிங்சன்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (23)

ஷாகிப் அல் ஹசன் புதிய சாதனை

உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் வீரர் புதிய சாதனையைப் படைத்தார். நடப்பு உலகக் கிண்ணத்தில் 500 ஓட்டங்களுக்கு மேல் குவித்தும், 10 இலக்குகளுக்கும் மேல் எடுத்தவர் என்ற சாதனையை ஷாகிப் அல் ஹசன் படைத்தார்.

இதற்கு முன்பு நியூசிலாந்தை சேர்ந்த ஸ்காட் ஸ்டைரிஸ் 2007ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் 449 ஓட்டங்கள் எடுத்து 9 இலக்குகளை கைப்பற்றியதே சாதனையாக இருந்தது.

இன்றைய போட்டி

இங்கிலாந்து அணி அரையிறுதிக்குள்

பெயர்ஸ்ரோவின் அதிரடியான ஆட்டம் வூட்டின் அபாரமான பந்து வீச்சு ஆகியன கைகொடுக்க இங்கிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம் பெற்ற போட்டியில் இங்கிலாந்து நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 119 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணி இந்தப் போட்டியில் தோல்வியடைந்தால் அரையிறுதி செல்லும் வாய்ப்பை இழக்கும் நிலை காணப்பட்டது. இதனால் அணியின் ஆரம்ப வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் ஆரம்ப இணையை பிரிப்பதற்கு திணறினர். ஒருவாறு அணி 123 ஓட்டங்களைப் பெற்ற போது முதலாவது இலக்கை வீழ்த்தினர். பெயர்ஸ்ரோ சதம் கடந்து அசத்தினார். அணித் தலைவர் மோர்கன் தனது பங்களிப்பை பொறுப்பாக செய்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சி கொடுத்தனர். அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 4 இலக்குகளை இழந்தது. அணியில் லாதம் மட்டுமே அரைச் சதம் கடந்திருந்தார். ஏனைய அணி வீரர்கள் இங்கிலாந்தின் பந்து வீச்சில் சிக்கி சின்னாபின்னமானார்கள். அணி 45 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஆர்ச்சர் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி17 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணி வீரர் பெயர்ஸ்ரோ தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 12 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்துக்கு முன்னேறியது. ஆரம்பத்தில் இருந்து முதலிடத்தில் இருந்து வந்த நியூசிலாந்து அணி வெளியேற்றப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நியூசிலாந்தின் அரையிறுதி பாகிஸ்தான் பங்களாதேஷ் போட்டியே தீர்மானிக்கும்.

இந்தியாவை வீழ்த்துவோம்

தனஞ்சய தெரிவிப்பு

இந்திய அணி வீழ்த்த முடியாத அணி அல்ல. ஐ.சி.சி. தொடர்களில் ஏற்கனவே நாம் இந்தியாவை வீழ்த்தியுள்ளோம் என்பதால் உலகக் கிண்ணத்திலும் வீழ்த்துவோம் என்று இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரரான தனஞ்சய டி சில்வா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்திய அணி ஒன்றும் வீழ்த்த முடியாத அணி அல்ல. மேற்கிந்தியத்தீவுகளை வீழ்த்தி அதிகமான நம்பிக்கையுடன் இருக்கிறோம். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் வென்று போட்டியை உயர்ந்த இடத்தில் முடிப்போம்.

ஒவ்வொரு போட்டியையும் வெல்வதற்காகவே விளையாடுகின்றோம். இந்திய அணியை நாங்கள் தோற்கடித்தால் உலகக் கிண்ணத் தொடரில் 5 ஆவது இடத்துக்கு உயர்வோம்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன் கிண்ணத் தொடரில் இந்திய அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணி வென்றிருந்தது. இதேபோன்ற முடிவை இந்தப் போட்டியிலும் இலங்கை அணி பெறும் - என்றார்.

நடப்பு உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி 8 போட்டிகளில் விளையாடி 3போட்டியில் வெற்றியும், 3 போட்டியில் தோல்வியும், 2 போட்டி மழையாலும் கைவிடப்பட்டது. புள்ளிகள் அடிப்படையில் இலங்கை அணி 6ஆவது இடத்தில் இருக்கிறது. இலங்கை அணியால் இந்திய அணியையென்றால்கூட உலகக் கிண்ணத்தின் அரையிறுதிக்கு தகுதிபெற முடியாத நிலையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பத்தி ராயுடு ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணியின் மத்தியதர துடுப்பாட்ட வீரரான அம்பத்தி ராயுடு பன்னாட்டு கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு ராயுடு தேர்வு செய்யப்படவில்லை. அவருக்கு பதிலாக விஜய் சங்கருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஷிகர் தவான், விஜய் சங்கர் ஆகியோர் காயம் காரணமாக உலக கிண்ணத் தொடரிலிருந்து விலகிய போதிலும் மாற்று வீரர் பட்டியலில் வைக்கப்பட்டு இருக்கும் அம்பத்தி ராயுடுவுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. ரிஷப் பந்த், மயங்க் அகர்வால் ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், அம்பத்தி ராயுடு நிராகரிக்கப்பட்டதை ஜஸ்லாந்து கிரிக்கெட் நிர்வாகம் பயன்படுத்திக் கொள்ள விரும்பியது. அம்பத்தி ராயுடுவை தங்கள் நாட்டுக்காக விளையாடும்படி கேட்டுக்கொண்டதுடன், அவருக்கு நிரந்தர குடியுரிமை பெற்றுத் தரவும் முன்வந்தது.

இந்த நிலையில், ஐ.பி.எல். உட்பட அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் விலகுவதாக அம்பத்தி ராயுடு அறிவித்திருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் இதுவரை 55 பன்னாட்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடி 3 சதங்கள், 10 அரைச் சதங்கள் அடங்கலாக ஆயிரத்து 694 ஓட்டங்களையும், பன்னாட்டு ஆறு ரி- 20 போட்டிகளில் விளையாடி 42 ஓட்டங்களையும் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா கால்பந்து வீரருக்கு கொலை மிரட்டல்

பெனால்டி ஷீட் வாய்ப்பை தவறவிட்ட கொலம்பியா கால்பந்து வீரருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. கோபா அமெரிக்கா கால்பந்து போட்டி பிரேசிலில் நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதி ஆட்டத்தில் பெனால்டி வாய்ப்பில் கொலம்பியா அணி 4:5 என்ற கோல் கணக்கில் சிலியிடம் தோல்வியடைந்து வெளியேறியது.

இந்த ஆட்டத்தில் கொலம்பியா வீரர் வில்லியம் டெசில்லோ பெனால்டி வாய்ப்பில் கோல் அடிக்காமல் தவறவிட்டார். இதனால் கோபமடைந்த கொலம்பியாவை சேர்ந்த ஒருவர் சமூக வலைத்தளம் மூலம் வில்லியம் டெசில்லோவுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

அதில் "1994ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் சுய கோல் அடித்ததால் சுட்டு கொல்லப்பட்ட கொலம்பியா வீரர் ஆந்த்ரே எஸ்கோபருக்கு நேர்ந்த கதி தான் வில்லியம் டெசில்லோவுக்கும் ஏற்படும்" என்று குறிப்பிட்டார்.

இந்த தகவலை வில்லியம் டெசில்லோ உள்ளூர் பத்திரிகைக்கு தெரிவித்தார். ஆனால் அவர் பொலிஸில் முறைப்பாடு எதையும் பதிவு செய்யவில்லை. இந்த மிரட்டல் குறித்து கொலம்பியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

உடனடி வேலை வாய்ப்பு
நீங்கள் O/L, A/L பரீட்சைக்கு தோற்றியவரா? அடுத்து என்ன செய்வதென்று எண்ணும் தருணம். இன்றே எங்களுடன் இணையுங்கள். உங்களுடன் இணைய நாங்கள் தயாராகவுள்ளோம்.
கடந்த வருடம் பரீட்சையில் தோற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வணிகத் துறையில் நீங்களும் முன்னணி வகிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு
✔உங்கள் திறமைக்கேற்ற பதவி ✔கவர்ச்சிகரமான சம்பளம்
✔நிரந்தரமான தொழில் ✔வயதெல்லை 18-45
✔10-O/L படித்தவர்களுக்கும் பதவி வெற்றிடங்கள் உண்டு.
✔தங்குமிட வசதி உண்டு.
CALL: 077 517 9034 , 076 078 2110

Techno World
A/L2019
பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான
விசேட செயலமர்வு
ஆரம்பம் காலை 09.00 மணிமுதல் மதியம் 2 மணிவரை

திகதி	பாடங்கள்
12,13,14	பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
15,16	தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
19,20,21	I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, இலகு கணிதம், சித்திரம்

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்
அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புகளுக்கு: 0770175346, 0771703549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

கோபா அமெரிக்க கால்பந்து தொடர்;

பிரேசில் அணி இறுதிக்கு தகுதி

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் 2:0 என்ற கணக்கில் இலகுவாக ஆர்ஜென்டினாவை வீழ்த்தி பிரேசில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

'கோபா' அமெரிக்க கால்பந்து தொடர் பிரேசில் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த பிரேசில் - ஆர்ஜென்டினா அணிகள் மோதின. ஆட்டம் ஆரம்பித்து முதல் பாதி ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் கப்ரியல் ஜீசஸ் அபாரமான ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் பிரேசில் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு கோல்களை அடிக்க எத்தணித்தனர். ஆட்டத்தின் 71ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி வீரர் பேர்மினோ ஒரு கோலைப் போட்டார். இறுதியில் பிரேசில் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணி வீரர்கள் பிரேசிலின் கோல் கம்பங்களை நோக்கி 14 முறை பந்தை அடித்த போதிலும் அவர்களால் ஒரு பந்தைகூட கோலாக மாற்ற முடியவில்லை என்பது துரதிர்ஷ்டமே. ஆர்ஜென்டினா அணி வீரர்கள்தான் அதிகமான நேரம் பந்துகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அந்த அணி தனக்கு கிடைத்த நான்கு கோனர்களையும் தவறவிட்டிருந்தது. ஆர்ஜென்டினா அணியின் சொதப்பலான ஆட்டத்தினால்தான் பிரேசில் அணியிடம் தோல்வியடைந்தது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சிலி, பெரு அணிகள் இன்று மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணியுடன் பிரேசில் அணி இறுதிப் போட்டியில் மோதும்.

வாவ்ரிங்கா அசத்தலாட்டம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் வாவ்ரிங்கா வெற்றிபெற்றார்.

வாவ்ரிங்காவை எதிர்த்து பெமிலன்ஸ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்நது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றார் வாவ்ரிங்கா. (ம)

மரண அறிவித்தல்

"மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலை வாழ்வு பெறுவர்"
(யோவான் 3:36 அ



பிறப்பு
11
.
04
.
1927

இறப்பு
03
.
07
.
2019

மடுத்தீன்பிள்ளை சூசைப்பிள்ளை

மடுத்தீன்பிள்ளை சூசைப்பிள்ளை நேற்று (03.07.2019) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மடுத்தீன்பிள்ளை விரிச்சிட்டம்மாள் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற திருமதி லூர்த்தம்மா அவர்களின் கணவரும், திருமதி ஜோர்ஜ் மேரி யோசட்டான், காலஞ்சென்ற அருள் மரீனா, திருமதி அஞ்சலா மேசிரதி, பிரான்சிஸ் சேவியர், திருமதி செபநேச இராக்கினி, திருமதி மேரி மெக்ரலின் ராஜி, திருமதி றோசலின் றெஜீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவதாஸ் (துரை), அல்பிறட், பைந்தமிழ் செல்வன், திருமதி சந்திராதேவி (நோர்வே), திருமதி முரளிதரன் (நோர்வே), சாள்ஸ்றோகன், யோசப் மாட்டின் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (06.07.2019) முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புனிதசெபஸ்தியார் ஆலயம் - பாரதிபுரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

155 ஆம் கட்டை,
பாரதிபுரம், கிளிநொச்சி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

0713827879

அன்டர்சன் அபாரம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றார் அன்டர்சன். அன்டர்சனை எதிர்த்து ஹேர்பெர்ட் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் அன்டர்சன். (ம)

வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்திய 15 வயதேயான வீராங்கனை

ஐந்து முறை விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்ற வீனஸ் வில்லியம்சை, 15 வயது இளம் வீராங்கனை ஒருவர் அறிமுக போட்டியிலேயே வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் தகுதிச்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து தலைமைச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (வயது 39), சக நாட்டைச் சேர்ந்த கோரி காப் (வயது 15) மோதினர். கோகா என்ற புனைப் பெயர் கொண்ட கோரி காப், தகுதிச் சுற்றின் மூலமாக தலைமைச் சுற்றுக்கு முன்னேறியவர்.

ஐந்து முறை விம்பிள்டன் சாம்பியன் பட்டம் வென்ற வீனஸ் வில்லியம்ஸ், தனது அனுபவ ஆட்டத்தால் கோரி காப்பை எளிதில் வீழ்த்தி விடுவார் என்றே ரசிகர்கள் நினைத்தனர். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், அறிமுக போட்டியிலேயே அசத்திய கோரி காப், அடுத்தடுத்து புள்ளிகளைக் குவித்து வீனசுக்கு அதிர்ச்சி அளித்தார். 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் கோகா. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.